வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 09.05.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 151 பக்கங்கள் : 16

# வடக்கு - கிழக்கு ஒரே அலகு என்பதற்கு மாறான பேச்சில் பங்கேற்கமாட்டோம்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மே 09

**வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் - தமிழ் பேசும் மக்களின் சரித்திரபூவர்வமான வாழ் விடம். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்கப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. இந்த அடிப்படைக்கு மாறாக எந்தப் பேச்சிலும் நாம் பங்கேற்க மாட்டோம் - இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பி னர்கள் இன்றைய தினம் சந்தித்துப் பேசவுள்ளனர். இந்தப் பேச்சு தொடர்பான முன்னாயத்தக் கூட் டம் கொழும்பில் உள்ள இரா. சம்பந்தனின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் என்று ஒப்பமிட்டு அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், "தமிழ்த் தேசிய பிரச்னைக்கான தீர்வு சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக நாம் அரசாங்கத்தோடு பேசி முடி வெடுக்கத் தயார். வடக்கும் கிழக்கும் தமிழ் 15




## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 09

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவு கூரும் முகமாக வடக்கு, கிழக்கு முழுவதும் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட் டில் இன்று செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை யில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு முழுவதும் முன் னெடுக்கப்படவுள்ளது. 15

## தமிழரசு கட்சியின் எம். பிக்கள் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

### சம்பந்தனின் தலைமையில்

### தமிழ் தேசிய கூட்டமைப்பு பங்கேற்காது

யாழ்ப்பாணம், மே 09

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன் தலை மையில் இன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவை சந்தித்துப் பேசவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட் டமைப்புக்கு தனியாக ஜனாதிபதி அழைப்பு விடுக்காமையால் இந்த சந்திப்பில் அந்தக் கட்சி பங்கேற்காது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகவலை அந்தக் கட்சியின் பங்காளிக் கட்சித் தலைவரான த. சித்தார்த்தன் எம். பி. உறுதிப்படுத்தினார்.

இனப்பிரச்னை தீர்வு தொடர்பில் நாளை மறு தினம் வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை தமிழ்க் கட்சிகளின் தலை வர்களை 15

## சஜித்தின் தலைமையில் புதிய தேர்தல் கூட்டணி!

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்!

- ஜனாதிபதி தேர்தலில் தனித்து போட்டி
- அரசாங்கத்தில் இணைவதில்லை

கொழும்பு, மே 09

அரசாங்கத்தில் இணை வது அல்லது பதவிகளை ஏற்பதில்லை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் தனியான வேட்பாளரை நியமிக்க வேண்டும் என இரு சிறப் புத் தீர்மானங்களை நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள் ளது. 15

## ஜனாதிபதி சாதகமாக பதில் தரவில்லை!

### சாகர எம். பி.

கொழும்பு, மே 09

அமைச்சு பதவி தொடர்பில் ஜனாதிபதி யிடம் முன்வைத்த கோரிக்கைக்கு சாதக மான பதில் கிடைக்க வில்லை. ஆகவே, அமைச் சுப் பதவி தொடர் பில் தொடர்ந்து வலியு றுத்த போவதில்லை 15

## ஜனாதிபதியுடனான பேச்சில் த. தே. கூட்டமைப்பு பங்கேற்கும்

யாழ்ப்பாணம், மே 08

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் அழைப் பின் பேரில் நாளை மறு தினம் வியா ழக்கிழமை ஆரம்பமாக வுள்ள மூன்றுநாள் தொடர் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற் கும் என்று உறுதியாகத் தெரிய வருகின்றது.

தமிழ் மக்களின் இனப் பிரச்னை தீர்வு தொடர் பில் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 13ஆம் திகதி சனிக்கிழமை வரை ஜனாதிபதி செயலகத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. இதற்கான அழைப்பை ஜனாதிபதியின் வடக்கு மாகாண இணைப்பாள ரும் மேலதிக செயலாளரு மான எல். இளங்கோவன் வடக்கு எம். பிக்களுக்கு தனித் தனியாக அழைப்பு 15

## ஓமானில் இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்த 74 பெண்கள் 9 மாதங்கள் அடைத்து வைப்பு

கொழும்பு, மே 09

ஓமான் நாட்டுக்கு பணிப் பெண்களாக வேலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பல் வேறு சித்திரவதைக்கு உள்ளாகி இலங்கை தூதரகத்தில் தஞ்சம டைந்து 9 மாதங்களாக தடுத்து வைக்கப்பட் டுள்ள 74 பணிப் பெண் கள் தங்களை நாட்டுக்கு அனுப்புமாறு உருக்க மாக கோரிக்கை விடுத்து காணொலி வெளியிட்டுள் ளனர்.

நாட்டிலுள்ள முக வர்கள் ஊடாக ஓமான் நாட் டுக்கு பணிப் பெண்களாக சென்ற பணிப் பெண்கள் வீட்டின் உரிமையாளர் களால் அடித்தல், நெருப் பால் சூடு வைத் தல் மற்றும் சம் பளம் வழங்காமை 15

## வேட்பாளரான அரச பணியாளர்கள் இன்று முதல் பணிக்கு திரும்பலாம்!

கொழும்பு, மே 09

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்த அரச ஊழியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் பணிக்கு திரும்ப முடியும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரி வித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ள தாக இராஜாங்க அமைச் சர் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் இணக்கப்பாட் டுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள் ளது.

தாங்கள் தேர்தலில் போட்டியிடும் எல் லைக்கு வெளியே பணி புரியும் அரச ஊழியர் களுக்கு இதற்கு முன்னரே பணிக்கு சமுகமளிப்ப தற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தேர்தலில் 15

## முதலில் 22 எம். பிக்களை கைப்பற்றுங்கள் பிறகு நினைவேந்தல்களை கைப்பற்றலாம்!

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், மே 09

முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட நினைவேந்தல் களை கைப்பற்ற வேண் டும் என்று கூறும் தரப்பு வடக்கு, கிழக்கு சார்பில் பாராளுமன்றில் 22 ஆச னங்களை கைப்பற்றட் டும். அதன் பின்னர் நினைவேந்தல்களை கைப் பற்றுவது குறித்து சிந்திக் கலாம் என்று தெரிவித் துள்ளது யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்.

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சார் பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பி லேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பாராளுமன் றத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் ஆசனங்களை முழுமையாகக் கைப்பற்றிவிட்டு 15

## தமிழ் கட்சிகள் கூட்டமைப்பாக பேச்சுகளில் பங்கேற்க வேண்டும்!

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்து

திருகோணமலை, மே 09

தமிழ்த் தேசிய கட்சி கள் முன் நிபந்தனையு டன் வடக்கு, கிழக்கு இணைந்த கூட்டமைப் பாகவே பேச்சில் பங் கேற்க வேண்டும் என கூறியுள்ளார் ஒருங்கி ணைந்த தமிழர் கட்ட மைப்பின் அழைப்பாளர் அகத்தியர் அடிகளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இன்று வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் தொல்லியல் திணைக்கள அடாவடிக ளும் கோவில்கள் அழிப் பும் அத்துமீறிய பௌத்த விகாரைகள் அமைப்பும் - பௌத்த மயமாக் கலும் அசுர வேகத் தில் அரச 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

"இனப் பிரச்னை தீர்வு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அடுத்த வாரத்தில் 3 நாட்கள் தொடர் பேச்சு நடைபெறவுள்ளது. அடுத்த வாரம் 11, 12, 13ஆம் திகதிகளில் இந்த பேச்சு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சில் பங்கேற்குமாறு வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி பணிமனையிலிருந்து அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.",

மேலேயுள்ள செய்தி கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

இந்தச் செய்தி வெளிவந்த மறுநாள் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூடி கிடைத்திருக்கும் அழைப்புக் குறித்து ஆராய்ந்தது.

"ஜனாதிபதியோடு இடம்பெறும் வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு அழைக்காவிட்டால் குறித்த கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கும்."

இதுவே, அவர்களது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் அவர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தது.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சுகள் என்றால் அதில் கிழக்கு எம்.பிக்களும் அழைக்கப்படவேண்டும் என்பது கட்டாயமானதுதான்.

இனப்பிரச்னை என்றால் அது ஏதோ வடக்கு சம்பந்தப்பட்ட பிரச்னை என்பது போல காட்டிக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க எப்போதுமே முனைவது நாம் அறிந்ததுதான். இதேபோல, வடக்கையும் கிழக்கையும் அவரின் வழக்கமான பாணியில் சிண்டு முடிந்துவிடுவதும் இன்று நேற்று நடப்பதல்ல. இது ஜே. ஆர் காலத்திலிருந்தே நடந்துவரும் ஒன்றுதான்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது என்று முடிவானது. அந்த இடைக்கால நிர்வாக சபையில் புலிகள் இயக்கத்துக்கு ஏழு உறுப்பினர்கள் வழங்கப்படவிருந்தது. தமது பிரதிநிதிகளாக யாரைப் போடவேண்டும் என்று பெயர்களை கொடுத்தார்கள். அதேவேளை இந்த ஏழு பேருக்கு மேலதிகமாக இருவரின் பெயர்களையும் தருமாறு அரச தரப்பில் கேட்கப்பட்டது. அதேபோல குழுவின் தலைவராக ஒருவரின் பெயரையும் தலைவருக்கான தெரிவுக்காக மேலும் இரண்டு பேரின் பெயர்களையும் அரசு புலிகளிடம் கேட்டிருந்தது. குழுவுக்கு தலைவராக இன்றைய அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் பெயரை புலிகள் கொடுத்திருந்தனர். அதைவிட மேலதிகமாக வல்வை சிவஞானசுந்தரம் ஐயா, மட்டக்களப்பு ஓய்வு பெற்ற அரச அதிபர் பத்மநாதன் ஆகியோர் பெயர்களை புலிகள் கொடுத்திருந்தனர். புலிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எழுவரில் மட்டக்களப்பை சேர்ந்த இருவர் பெயர்களை நீக்கிவிட்டு, அவர்கள் மேலதிகமாகக் கொடுத்திருந்த யாழ்ப்பாணத்தவர்கள் இருவரை உறுப்பினர்களாகத் தெரிவு செய்தார் ஜே. ஆர்.

அவர் மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே சிண்டுமுடிகிறார் என்பதை அறிந்த புலிகள், உடனே தலைமைப் பதவிக்கு தாம் சிபாரிசு செய்த சிவஞானத்துக்கு பதிலாக மட்டக்களப்பு பத்மநாதனை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து அந்த இடைக்கால நிர்வாக சபை யோசனையையே நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது.

வடக்கையும் கிழக்கையும் பிரிக்க மாமனார் ஜே. ஆர். காலத்திலேயே திட்டமிடப்பட்டது என்பதை ஞாபகப்படுத்தவே இந்த பழைய சரித்திரத்தை மீட்க வேண்டியதாயிற்று.

இப்போதும் அதே பாணியில் தெற்கு காய்களை நகர்த்துகின்றதா என்ற சந்தேகம் கூட்டமைப்பினருக்கு வந்ததில் நியாயம் இல்லாமல் இல்லை.

ஆனால், அதுவல்ல இன்று எமக்கு உறுத்துகின்ற சங்கதி.

பதினோராம் திகதி பேச்சுகளுக்கு முன்னதாக தமிழரசு எம்.பிக்கள் ஜனாதிபதியை இன்று சந்திப்பதற்கு நேரம் கேட்டிருக்கின்றனர் என்றும் அந்தச் சந்திப்பு இன்று நடைபெறவிருக்கின்றது எனவும் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

எமது கேள்வி எல்லாம் அந்தச் சந்திப்பிலும் பின்னர் பதினோராம் திகதி தொடங்கும் பேச்சுகளிலும் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவருமான இரா. சம்பந்தன் ஐயா கலந்துகொள்வாரா இல்லையா என்பதே.

அவர் உடல்நலம் ஒத்துழைத்தால் நிச்சயம் கலந்துகொள்வார் என்றே நம்பப்படுகின்றது.

அவர் கலந்துகொள்வாரெனில், திருகோணமலை வடக்குடன் இணைக்கப்பட்டுவிட்டதா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# கோப் குழுவின் தலைவரை நியமிக்க கூடுகின்றது பாராளுமன்ற அலுவல் குழு

பொது நிதி (கோப்) தொடர்பான குழுவின் தலைவரை நியமிப்பதற்காக பாராளுமன்ற அலுவல்கள் குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடவுள்ளது.

இந்த சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பொது நிதி தொடர்பான குழுவின் தலைவரை நியமிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரியில் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸநாயக்க பதவி விலகியதைத் தொடர்ந்து, தற்காலிக அடிப்படையில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைவர்களாக செயல்பட்ட போதிலும், பொது நிதி தொடர்பான குழுவுக்கான நிரந்தரத் தலைவரை பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## "எனக்கு அறிவிப்பு வரவில்லை"

யாழ்ப்பாணம், மே 09

"என்னை பதவியில் இருந்து விலகுமாறு எந்த அறிவித்தல்களும் ஜனாதிபதி தரப்பில் இருந்து எனக்கு விடுக்கப்படவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநர் உள்ளிட்ட 4 மாகாணங்களின் ஆளுநர்களை அவர்கள் வகிக்கும் பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அறிவுறுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த விடயம் குறித்து ஆளுநரிடம் கேட்டபோதே தமக்கு பதவி விலகுமாறு அறிவித்தல் எதுவும் வர வில்லை என்று ஆளுநர் தெரிவித்தார்.(ஐ-03)



## முத்திரை சந்தி விபத்தில் பெண் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், மே 09

வீதியில் நின்ற கார் சடுதியாக திருப்பப்பட்டபோது சைக்கிளில் வந்தவரை மோதியது. இதில், சைக்கிளில் வந்த பெண் படுகாயமடைந்துள்ளார்.

நல்லூர் - முத்திரை சந்திக்கு அண்மையாக நேற்று திங்கட்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வீதியில் நின்றவர்கள் அவரை மீட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)

# மக்கள் பிரதிநிதிகள் மீதான இரு வழக்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 09

75 ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டித்தமை தொடர்பான வழக்கு ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கும் , ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின்போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பான வழக்கு செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

குறித்த இரு வழக்குகளும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தின்போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் , யாழில் கொண்டாடப்பட்ட 75 ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டித்தமை தொடர்பான இரு வழக்குகளும் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

கறுப்பு தினமாக அனுஷ்டித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன், யாழ்.மாநகர முன்னாள் மேயர் மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியவர்களுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, கடந்த தவணையில் பிணை வழங்கப்பட்டு 3 மாதங்களின் பின்னர் வழக்கு அழைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நான் 1,2,,4,7 ஆவது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகி சில விடயங்களை எனது வாதத்தில் முன் வைத்தேன்.

அதில், கைது செய்யப்பட்டமைக்கு முதலறிக்கையில் கூறப்பட்டுள்ள காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்கள் என்றும், இதனால் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் முன்வைத்திருந்தேன்.

அத்துடன் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாயின் பொலிஸாருக்கு எதிராக நாமே வழக்கு தாக்கல் செய்யவேண்டும். மாறாக அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறான ஒரு வழக்கைத் தாக்கல் செய்து மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்றுக்கு அழைத்தமைக்கு நாமே பொலிஸாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் .

பொலிஸார் எந்த விதமான முறைப்பாடுகளோ அல்லது சாட்சியத்தின் சுருக்கங்களோ இன்றி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன் கடந்த 3 மாதங்களாக எந்த விதமான புலன் விசாரணைகளும் இடம்பெறவில்லை. ஒரு வழக்கைத் தாக்கல் செய்யும்பொழுது அந்த வழக்கின் விசாரணைகளை தொடரவே வழக்கு தாக்கல் செய்து திகதி வழங்கப்படுகின்றது. அந்த விசாரணைக்கு மறு தவணை கொடுக்கும்பொழுது அந்த குறித்த காலத்திற்குள் செய்த விசாரணைகளுடைய மேலதிக அறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும்.

ஆனால் பொலிஸார் எந்த வித மேலதிக அறிக்கையினையும் தாக்கல் செய்யவில்லை.

அதனால் காலம் நேரத்தையும் சந்தேகநபர்கள் சமூக சேவைகளையும் கருத்திற்கொண்டு இந்த வழக்கைக் கிடப்பில் போடுமாறு விண்ணப்பத்தில் முன்வைத்தோம். குறித்த விண்ணப்பத்தை முன்வைத்த அடிப்படையில் வழக்குக்கான தீர்ப்பை வழங்குவதற்காக ஜூன் மாதம் 23 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியின் விஜயத்தின்போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களிற்கெதிராக ஆஜராகியிருந்தோம். அத்துடன் அந்த வழக்கில் சந்தேக நபர்களை அதிகரித்துச் செய்வதால் அதனை விரைவாக முடித்து , சட்டமா திணைக்களத்துக்கு அனுப்பி வழக்கு ஒன்று இருக்கின்றதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்குமாறும் நீதிமன்றில் வேண்டுக் கொண்டோம்.

அத்துடன் காலதாமதமாக அழைக்குமாறும் வேண்டிக் கொண்டதை அடுத்து, இந்த வழக்குக்கு செப்ரெம்பர் 04 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
09.05.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## விகாரை அரசியல்?

விகாரைகளை நிறுவும் வேலைத்திட்டத்தை சிங்கள ஆளும் வர்க்கம் கைவிடவில்லை. எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அதனை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. தமிழரின் எதிர்ப்புகளால் அதனைத் தடுக்கவும் முடியவில்லை. தமிழரின் எதிர்ப்பும்கூட மிகவும் பலவீனமான எதிர்ப்புத்தான். தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் என்போரால் தேர்தல் அரசியலை தாண்டி வரமுடியாமையே இதற்கான காரணமாகும்.

குறிப்பாக, இவ்வாறான எதிர்ப்புகளில் முன்னணியில் நிற்பதாகத் தங்களைக் காண்பித்துக் கொள்ளும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணியினர்) மக்களை அணிதிரட்டி நன்கு திட்டமிடப்பட்ட வகையில் இவற்றை முன்னெடுக்கவில்லை. இதேவேளை, ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயல்படவும் முன்னணி தயாராக இல்லை.

இவ்வாறான மனோநிலையானது மறுபுறம் தமிழரின் எதிர்ப்பை எப்போதும் பலவீனமானதொரு நிலையில் பேணிக்கொள்வதற்கே பயன்படுகின்றது. இது தொடர்பில் முன்னணி கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. ஆனால், இதுபோன்ற சிலர் கூடிக்கலையும் எதிர்ப்பால் - விகாரை அரசியலை ஒருபோதுமே எதிர்கொள்ள முடியாது. முன்னணியினரின் எதிர்ப்புகளால் இதுவரையில் விகாரைகளின் நீட்சியை தடுக்க முடியவில்லை. அவ்வாறாயின், அவர்களின் எதிர்ப்பு பயனற்றது என்பதே பொருளாகும். அவர்கள் கடைப்பிடித்து வருகின்ற அணுகுமுறை தவறானது என்பதையே, இதுவரையான அணுகுமுறைகளின் தோல்வி எடுத்துரைக்கின்றது.

வடக்கு - கிழக்கை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்ட பின்னர் விகாரைகளை நிறுவுவதை ஒரு பின் - யுத்த விரிவாக்கல் கொள்கையாகவே சிங்கள ஆட்சியாளர்கள் கைக்கொண்டு வருகின்றனர். விகாரைகளின் மூலமான பௌத்த மயமாக்கல் மட்டும் கட்சி பேதங்களை மீறி அனைவருக்குமான கட்சிக் - கொள்கையாகத் தொடர்கின்றது. இதனை எதிர்கொள்வதற்கு வழக்கமான தமிழ்க் கட்சி அரசியல் அணுகுமுறைகளால் பெரிதாக எதனையும் செய்துவிட முடியாதென்பதுதான் இதுவரையான பட்டறிவு.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த 14 வருடங்கள் இதனை தெளிவாக நிரூபித்திருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போரின் எதிர்ப்பு, புலம்பெயர் அமைப்புக்களின் முறைப்பாடுகள், அமெரிக்க - இந்திய தூதரகங்களின் கரிசனை - இவற்றையும் தாண்டி விடயங்கள் நடந்து கொண்டுதானே இருக்கின்றன. அவ்வாறாயின் இவற்றை தடுப்பதற்கு என்னதான் வழி - அல்லது தடுக்கவே முடியாதா?

ஒருவேளை சமஷ்டி தீர்வை தமிழர்கள் கோரும் வரையில் அவர்கள் தங்களின் விகாரைகளின் விரிவாக்கத்தையும் நிறுத்தப் போவதில்லையா? அல்லது சில வருடங்களுக்குப் பின்னர் இப்போதிருக்கும் தமிழர்களின் தொகையும் வீழ்ச்சியடைந்துவிடும். அவ்வாறானதொரு சூழலிலில் தமிழரின் எதிர்ப்புகள் வெறுமனே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் மட்டுமே சுருங்கிப்போய்விடும் - எனவே, அதுவரையில் விகாரைகளை விரிவாக்கிக் கொண்டே செல்வோமென்று எண்ணுகின்றனரா? இது தொடர்பில் பல கேள்விகள் எழுகின்றன. ஆனால், தடுப்பதற்கான பதில் மட்டும் சிக்காலனதொரு கேள்வியாகவே தொடர்கின்றது. இது தொடர்பில் முன்னரும் 'ஈழநாடு' ஒரு பரிந்துரையை முன்வைத்திருந்தது. மேற்குலக, இந்திய இராஜதந்திரிகளை வடக்குக்கு அழைத்து கலந்துரையாட வேண்டும். ஏன் இது தொடர்பில் கட்சிகளால் சிந்திக்க முடியவில்லை. ஏன் இதனை முன்னெடுக்க முடியவில்லை. அந்தளவுக்கு கட்சிகள் பலவீனமாக இருக்கின்றனவா? தமிழர்களை நோக்கி இராஜதந்திர சமூகத்தை திருப்புவதற்கு இதுவரையில் உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் கட்சிகள் ஏன் மேற்கொள்ளவில்லை.

## கத்திமுனையில் மருத்துவரிடம் ரூ. 5 இலட்சம், நகை கொள்ளை!

*மன்னார், மே 09*

*ஓய்வு பெற்ற மருத்துவரின் மருத்துவ நிலையத்துக்குள் நுழைந்த கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி 5 இலட்சம் ரூபாய் பணம், நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.*

*இந்த சம்பவம் மன்னார் - நானாட்டான் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,*

*நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியின் பின்னர் வீட்டுடன் சேர்ந்து இயங்கிய மருத்துவ நிலையத்துக்குள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசியவாறு மருத்துவரை கத்தியை காட்டி மிரட்டினர்.*

*அவரிடமிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பணத்தையும் வீட்டிலிருந்தவர்களின் நகைகளையும் கொள்ளையிட்டு சென்றனர்.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*இதேவேளை, நானாட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல திருட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று பொது மக்கள் தெரிவித்தனர். (ஐ)*

## சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கல்வி கருத்தரங்கு ஆரம்பம்!



*யாழ்ப்பாணம், மே 09*

*டான் தொலைக்காட்சி குழுமத்தின் கல்வி தொலைக்காட்சியும் வெண்கரம் அமைப்பும் இணைந்து க. பொ. த. சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக நடத்தும் இலவச கல்வி கருத்தரங்கு கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமானது.*

*யாழ்ப்பாணம் கல்வி வலய மாணவர்களுக்காக கருத்தரங்கே நேற்று கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் ஆரம்பமானது. இந்தக் கருத்தரங்கு இன்றும் நடைபெறவுள்ளது.*

*இதேநேரம், வரும் 10,11ஆம் திகதிகளில் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பூநகரி மத்திய மகா வித்தியாலயத்திலும், 12, 13ஆம் திகதிகளில் வலிகாம வலயத்துக்கு உட்பட்ட அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியிலும் 15, 16ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் 16, 17ஆம் திகதிகளில் மாத்தளை பாக்கியம் தேசிய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.*

*இம்முறை க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இந்த இலவச கல்வி கருத்தரங்கில் பங்கேற்று பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-03)*


## மகிந்த, கோட்டாபய, பஸிலுக்கு எதிரான மனு ஒத்திவைக்கப்பட்டது!

*கொழும்பு, மே 09*

*நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமான முக்கிய குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் ஜூலை 5ஆம் திகதிக்கு உச்ச நீதிமன்றத்தால் நேற்று ஒத்திவைக்கப்பட்டது.*

*முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, அலி சப்ரி, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி. பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் டபிள்யூ.டி. லக்ஷ்மன் மற்றும் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் அமைச்சரவையில் செயல்பட்ட அமைச்சர்கள் ஆகியோருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மே - 09 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - சித்திரை 26**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : சதுர்த்தி**




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடிப்பீர்கள். வசூல் மந்தமாக இருக்கும். வேலைச் சுமை குறையும். கடினமாக உழைக்கும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவி இடையே ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவர்வு உண்டு. உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த் தனையை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத லாபம் உண்டு. அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் விமர்சனங்களை தாண்டி முன்னேறுவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கன்னி**
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**துலாம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். புது வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் செலவுகள் அதிகரிக்கும். வரவு சுமார்தான். விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயல்படும் நாள்.

**தனுசு**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். உடல்நலம் பாதிக்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**மீனம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாக செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். நீங்கள் சாதிக்கும் நாள்.

# திராவிடவியல் கோட்பாட்டை நாடு முழுவதும் பரப்புவோம்!

## முதல்வர் மு. க. ஸ்டாலின்



காஞ்சிபுரம், மே 09

தமிழகத்தை முன்னேற்றிய திராவிடவியல் கோட்பாட்டை நாடு முழுவதும் கொண்டு சேர்ப்போம் என்று தி. மு. க. தலைவரும், தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் கூறினார்.

தி. மு. க. காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில், திமுக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் காஞ்சிபுரம் - பல்லாவரத்தில் நடந்தது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றுப் பேசுகயைில்,

தமிழகத்தில் 6ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ள தி. மு. க. அரசு, தற்போது 2ஆம் ஆண்டை நிறைவுசெய்து, மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக பாழ்பட்டுக் கிடந்த தமிழ்நாட்டை மீட்டது உதயசூரியன் ஆட்சி. திராவிடம் யாரையும் பிரிக்காது -அனைவரையும் அரவணைக்கும்.

திராவிடம் என்பது காலாவதியான கொள்கை அல்ல. சனாதனத்தைக் காலாவதியாக்கியது தான் திராவிடம். இதைப் பார்த்து ஆளுநர் பயப்படுகிறார்.

தனிப்பட்ட நட்புக்காக நான் கொள்கையை விட்டுக்கொடுக்க மாட்டேன். கொள்கையில் எப்போதும் உறுதியாக இருப்பேன். ஆளுநருடனான நட்பு வேறு; எங்களது கொள்கை வேறு.

தமிழக அரசின் நலத்திட்டங்கள் மூலமாக ஒரு கோடியே 3 இலட்சத்து 74 ஆயிரத்து 355 பேர் பயனடைந்துள்ளனர். நாங்கள் சொன்னதைச் செய்ததால்தான் கடந்த 2 ஆண்டுகளில் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளோம். இன்னும் சொல்லப்போனால், சொல்லாததையும் செய்திருக்கிறோம்.

தமிழ்நாட்டை முன்னேற்றிய திராவிடவியல் கோட்பாட்டை, இந்தியா முழுவதும் கொண்டு சேர்ப்போம். ஒன்றிய அளவில் ஒற்றுமையை உருவாக்கி, உன்னதமான அரசை தலைநகர் டெல்லியிலும் அமைப்போம். அதற்கான மக்களவைத் தேர்தல் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதற்கு நாம் தயாராவோம் - என்றார்.

(ஐ)

# தமிழ்நாட்டுடனான நட்புறவு தொடரும்!

## புதுச்சேரி முதல்வர் அறிவிப்பு!



புதுச்சேரி, மே 09

“தமிழகம் உள்ளிட்ட அயல் மாநிலங்களுடன் நட்புணர்வு தொடரும்” என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசைக்கு அந்த மாநில முதல்வர் ரங்கசாமி பதிலடி அளித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் முதல்வர் ரங்கசாமி நேற்று செய்தியாளர்களை சந்தித்த போது, தமிழக எம்.பி.க்களுக்கு புதுவையில் வேலை இல்லை என்று துணைநிலை ஆளுநர் தமிழிசை விமர்சனம் செய்துள்ளாரே என்று கேள்வி எழுப்பனர்.

இதற்கு பதிலளித்த முதல்வர் “தமிழகத்துடன் புதுச்சேரி நல்ல நட்புறவு உள்ளது தமிழகத்துடன் ஒத்துழைத்து இருப்போம். இது தொடரும். புதுவை மாநிலத்தையொட்டி தமிழகம், கேரளா, ஆந்திரா மாநிலங்கள் உள்ளன. இந்த அயல் மாநிலங்களுடன் பழைய நட்புறவு தொடரும்” என்று குறிப்பிட்டார். (ஐ)

# விடுதலை சிறுத்தைகள் கட்சியை பலப்படுத்த திருமாவளவன் திட்டம்!

சென்னை, மே 09

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் பொறுப்பில் 25வீத இளைஞர்கள், 10வீத பெண்கள், பட்டியலினத்தை சாராதவர்களை இடம் பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது சமூகவலைத்தளத்தில் பதவிட்டவை வருமாறு,

இந்திய அரசியல் வரலாற்றில் புதிய முயற்சியை நாம் மேற்கொள்கிறோம். பலருக்கு வழிகாட்டக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலைப்பாட்டை நாம் எடுத்திருக்கி



றோம்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பட்டியலினத்தவர் அல்லாதவர்கள், பெண்கள், இளம் தலைமுறை ஆகியோர் இணையவேண்டும் என அறைகூவல் விடுத்தோம். அதன் அடிப்படையில் கட்சியில் முஸ்லிம் மக்கள் கணிசமாகச் சேர்ந்தனர். பட்டியலினம் அல்லாத கிறிஸ்தவர்களும் சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் பொறுப்பில் 10 சதவீதம் பட்டியலினத்தவர்கள் அல்லாதோருக்கு இடமளிக்க இருக்கிறோம். இதே போன்று இளைஞர்களுக்கு 25 வீதம், பெண்களுக்கு 10 வீதம் ஒதுக்கவுள்ளோம்.

இவையெல்லாம் கட்சியை அர சியல் இயக்கமாக வலுப்படுத்துவதற்கான யுக்தி என்பதை உணர வேண்டும். இது கட்சியின் அகநிலை பண்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படை செயல்திட்டம். இதற்கு தொண் டர்கள் ஒத்துழைக்க வேண்டும். இதை மாற்ற வேண்டும் என்ற நெருக்கடியைத் தர வேண்டாம் - என்றார். (ஐ)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே. 09

பிரிட்டனுக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்.

லண்டனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு நிகழ்வுக்காக ஜனாதிபதி கடந்த வியாழன் அன்று பிரிட்டன் நோக்கிப் புறப்பட்டார்.

அங்கு, மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் பங்கேற்புடன் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டிலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

பின்னர் கானா மற்றும் ருவண்டா ஜனாதிபதிகளுடனும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடினார்.

தொடர்ந்து, சனிக்கிழமை லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெற்ற மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு நிகழ்வில் பங்கெடுத்த ஜனாதிபதி, சார்ள்ஸ் மன்னரைச் சந்தித்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## 5 வருடங்கள் வரி அனுமதி பெறாத வாகனங்கள் கறுப்புப் பட்டியலில்!

கொழும்பு, மே. 09

5 வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த விசேட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான வாகனங்களை தகவல் அமைப்பிலிருந்து நீக்குவதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தற்போது 83 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும், 60 இலட்சம் வாகனங்கள் மட்டுமே கியூ.ஆர். குறியீட்டு முறைமை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வருமானவரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள், மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் உதவியுடன் தகவல் அமைப்பில் இருந்து நீக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## வைத்தியசாலையில் ஒட்சிசன் திருடிய ஆறு பேர் மாட்டினர்!

கொழும்பு, மே. 09

பொலனறுவை பொது வைத்தியசாலையிலிருந்து நீண்ட காலமாக ஒட்சிசன் சிலிண்டர்களை திருடி விற்பனை செய்யும் பாரிய மோசடியில் ஈடுபட்டு வந்த வைத்தியசாலை ஊழியர் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலனறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் பின்னர், சந்தேகநபர்கள் அறுவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ஈரானால் கைப்பற்றப்பட்ட கப்பலில் இலங்கையர்களும்!

கொழும்பு, மே 9

**ஈரானால் அண்மையில் கைப் பற்றப்பட்ட எண்ணெய் கப்பலின் பணியாளர்களில் இலங்கையர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தி அசோசியேட்டட் பிரஸ் ஆய்வு செய்த செயற்கைக்கோள் புகைப்படங்களின் படி, ஈரானிய கடற்படையினரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட 2 எண்ணெய் கப்பல்கள், ஈரானின் முக்கிய துறைமுக நகரங்களில் ஒன்றான ஹார்முஸ் கடற்கரையில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

குறித்த 2 கப்பல்களும் வெவ்வேறு காரணங்களுக்காக கைப்பற்றப்பட்டபோதிலும், அணுசக்தி திட்டம் தொடர்பாக மேற்கத்திய நாடுகளுடன் ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியில் கைப்பற்றப்பட்டவையாகும் என்பது தெளிவாகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ஷல் தீவுகள் கொடியுடன் கூடிய எட்வான்டேஜ் ஸ்வீட் என்ற கப்பல் முதலில் ஏப்ரல் 27 ஆம் திகதி ஈரானால் கைப்பற்றப்பட்டது.

அதில் 23 இந்தியர்களும் ஒரு ரஷ்ய பிரஜையும், பணியமர்த்தப்பட்டிருந்தனர். இந்தக் கப்பல், தமது பயணத்தில் எந்த ஒழுங்கற்ற நடத்தையையும் காட்டவில்லை என்றாலும், கப்பல் மற்றொரு கப்பலைத் தாக்கியதன் காரணமாகவே கைப்பற்றப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இந்த எட்வான்டேஜ் ஸ்வீட் கப்பல், கலிபோர்னியாவின் சான் ரமோனைச் சேர்ந்த அமெரிக்க எரிசக்தி நிறுவனமான செவ்ரான் கோர்ப்பரேஷனுக்காக குவைத்தின் மசகு எண்ணெயை எடுத்துச் சென்றது.

இதனையடுத்து கடந்த புதன்கிழமையன்று, ஈரானின் துணை இராணுவப் புரட்சிக் காவலர்களால், இரண்டாவது கப்பலான பனாமாவின் நியோவி கப்பல், ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிழக்கு கடற் கரையில் உள்ள புஜைராவுக்குச் செல்லும்போது கைப்பற்றப் பட்டது.

இந்தக் கப்பலிலேயே, பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை கடற்படையினர் பணியாற்றியதாக கிரேக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. (அ)

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் பதவியில் விரைவில் மாற்றம்?

கொழும்பு, மே. 09

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளராக ரில்வின் சில்வா தற்போது பதவி வகித்து வரும் நிலையில், அப்பதவியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவுக்கு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் இறுதி முடிவை ஜே.வி.பி. இன்னும் எட்டவில்லை என அறிய முடிகின்றது. (அ)

## இலங்கை-பங்களாதேஷ் இரு தரப்பு ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சு!

கொழும்பு, மே 09

பங்களாதேஷுடனான இரு தரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதல் கட்ட பேச்சுவார்த்தையை இந்த மாத இறுதியில் இலங்கை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

குறித்த சந்திப்பானது எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக, ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச வர்த்தக அலுவலக பேச்சாளர் கே.ஜே. வீரசிங்க தெரிவித்தார்.

மெய்நிகர் மூலம் நடைபெறவுள்ள இந்த சந்திப்பில், ஒப்பந்தம் குறித்த யோசனைகள் மற்றும் அதனை எட்டுவதற்கான இறுதி திகதி உள்ளிட்ட பல வேறு முக்கிய தீர்மானங்கள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த ஒப்பந்தத்தின் ஊடாக, இரு நாடுகளின் வர்த்தகம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, முன்மொழியப்பட்ட சீனா - இலங்கை வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை என்பனவற்றுக்காக இந்திய மற்றும் சீனா அதிகாரிகளின் பதிலை இலங்கை எதிர்பார்த்துள்ளது.

இதேவேளை, உத்தேச வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, தனியார் துறை பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை முறையான முறையில் தொடர்வதாகவும் ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச வர்த்தக அலுவலக பேச்சாளர் கே.ஜே. வீரசிங்க தெரிவித்தார். (அ)

## அச்சுவேலி சிறுவர் நன்னடத்தை பாடசாலையிலிருந்து பணம் பெற்று சிறுவர்களை தப்பிக்க வைத்த காவலாளி

யாழ்ப்பாணம், மே 09

அச்சுவேலியிலுள்ள சிறுவர் நன்னடத்தை பாடசாலையிலுள்ள சிறுவர்களை பணத்தைப் பெற்று அங்குள்ள காவலாளி தப்பிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

வெளி மாகாணங்களைச் சேர்ந்த 13 மற்றும் 14 வயதுச் சிறுவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நன்னடத்தைப் பாடசாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளமை தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய தினமே வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து வவுனியா பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் அச்சுவேலிக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டனர்.

அச்சுவேலிப் பொலிஸாரால் சிறுவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், நன்னடத்தைப் பாடசாலையின் காவலாளிக்கு தமது பெற்றோர் பணத்தை வைப்பிலிட்டதாகவும் அவரே தப்பிக்க உதவியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் காவலாளி வெளியிலிருந்து சட்டவிரோதமாக பொருள்களைக் கொண்டு வந்து தருவார் என்றும் சிறுவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்துடன்தொடர்புடைய காவலாளியை பாடசாலை நிர்வாகம் பணி இடை நிறுத்தியுள்ளது. ஆனால் பொலிஸார் இதுவரை அவரைக் கைது செய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ஏழு கிலோ தங்கத்துடன் வர்த்தகர் ஒருவர் கைது!

கொழும்பு, மே. 09

07 கிலோ எடையுள்ள 15 கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த பயணி ஒருவரை சுங்க வளாகத்தை கடந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறும்போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரி வின் அதிகாரிகள் குழுவொன்று கைது செய்துள்ளது.

43 வயதுடைய வர்த்தகரான இவர் கொழும்பு மருதானை பிரதேசத்தில் வசிப்பவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று முன் தினம் காலை காலை 09.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமான நிலையத்தில் அனைத்து விசாரணைகளையும் முடித்துவிட்டு சுங்கச்சாவடி வளாகத்தில் இருந்து வெளியே வந்து விமான நிலையத்திலிருந்து வெளியே செல்லும்போது கைது செய்யப்பட்டார்.

பயணி தனது இடுப்பில் 08 பொதிகளில் மறைத்து வைத்திருந்த 04 கிலோ 400 கிராம் எடையுடைய 42 தங்க பிஸ்கட், அரை தங்க பிஸ்கட் மற்றும் 02 கிலோ 600 கிராம் எடையுள்ள நகைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (அ)

## இ.போ.சவின் பஸ்களில் கட்டண முறை மாற்றம்

கொழும்பு, மே. 09

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களில் கட்டணம் செலுத்தும் முறையை கியூ.ஆர் முறைக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள டிப்போக்கள் சிலவற்றுக்கு புதிய பஸ்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையை எப்போதும் தனியார் மயமாக்கப்போவதில்லை என்றும் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் 23 பஸ்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழர்களைத் தாயகத்திலிருந்தும் வெளியேற்றவா புத்த கோயில்கள்?



## கேள்வியெழுப்புகின்றார் சுரேஷ்

யாழ்ப்பாணம், மே. 09

**வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கு-கிழக்கைக் குறிவைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்தகோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பல நூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னர், அம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள். கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்கவேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 புத்தவிகாரைகளைக் கட்டுவதற்கு 2018 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறி மாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது. ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டுவிட்டார்கள்.

இலங்கை அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன மத பேதமின்றி போராட்டக்களத்தில் முன்னின்று போராடினார்கள். அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தனிநாட்டுக்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை.

ஆனால் சுதந்திரமடைந்ததன் பின்னர், சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டுவந்த தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டதிட்டங்களும் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் காட்டிய பாரபட்சமும், தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டி விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் தனித்துவத்தையும் இல்லாமல் செய்வதற்கு முற்பட்டவையுமே தமிழ் மக்களை சுயாட்சிக்காகவும் பின்னர் தனிநாட்டிற்காகவும் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளியது.

இலங்கையின் தென்பகுதியில் இனமோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குதான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்தமயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றாப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்படவேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்-என்றுள்ளது.

(அ)

# இந்த ஆண்டில் இதுவரை 31,098 டெங்கு நோயாளர்!

## அமைச்சர் கெஹலிய தகவல்

கொழும்பு, மே. 09

நாடளாவிய ரீதியில் பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும், இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 31,098 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

டெங்கு நிலைமை மோசமடைய முன்னர் பல்வேறு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு உடனடியாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிபுணர் அறிக்கை ஒன்றை வழங்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு உள்ளிட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

டெங்கு வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முயற்சிகளை ஒருங்கிணைக்க ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்களைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்த சுகாதார அதிகாரிகளுடன் பணிக்குழு செயல்படும்.

கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 6,953 நோயாளிகளும், கொழும்பு மாவட்டத்தில் 6,500 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர்.

டெங்கு பரவாமல் தடுக்க நுளம்பு பரவும் இடங்களை அகற்றுதல், பாதுகாப்பு ஆடை அணிதல் உள்ளிட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மக்கள் மேற்கொள்ளவேண்டும்-என்றார்.

(அ)

# “இந்து ஆலயங்கள், விகாரைகளை வைத்து அரசியல் நடத்தாதீர்கள்!”

கொழும்பு, மே. 09

“வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக திடீரென மதப் பிரச்னைகள் அதிகரித்துள்ளன. இதன் பின்னணி மர்மமாகவே உள்ளது.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் இன, மத ரீதியில் தொடரும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டும். இந்து ஆலயங்கள், விகாரைகள் ஆகியவற்றை வைத்து, அரசியல் நடத்த எவருக்கும் உரித்து கிடையாது. மத ரீதியிலான பிரச்னைகளை அரசு சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

அதைவிடுத்து பிரச்னைகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கக் கூடாது. பிரச்னைகளுக்கு அரசால் தீர்வு காண முடியாவிடின் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக நீதியைப் பெற வேண்டும். இதில் அரசின்தலையீடு இருக்கக்கூடாது.

அண்மைக்காலங்களாக வடக்கு-கிழக்கில் இன, மத ரீதியிலான பிரச்சினைகள் திடீரென அதிகரித்துள்ளன. இதன் பின்னணி குறித்து நாம் ஆராய்ந்தபோது, மர்மமாகவே இருக்கின்றது. உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது-என்றார்.

(அ)

# ஜே.வி.பிக்கு ஆப்பு வைத்த ரணில்!

கொழும்பு, மே. 09

கொழும்பு - காலிமுகத்திடலில் எந்தவோர் அரசியல் கூட்டமும் இசை நிகழ்ச்சியும் நடத்த முடியாது என்று ரணில் அரசு தீர்மானம் எடுத்தமைக்கு உண்மையான காரணம் ஜே.வி.பிக்கு ஆப்பு வைப்பதற்வே என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மே தினக் கூட்டத்தை காலிமுகத்திடலில் நடத்துவதற்குத்தான் ஜே.வி.பி. திட்டமிட்டிருந்தது. அதற்காக ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே ஜே.வி.பி. அனுமதியும் கோரி இருந்தது.

ஆனால், ஜே.பி.பியினர் காலிமுகத்திடல் முழுவதையும் நிரப்பும் வகையில் மக்களை அழைத்து வருவதற்குத் திட்டமிட்டிருந்தனர்.

அவ்வாறு அழைத்து வந்தால் ஜே.வி.பியின் மக்கள் பலம் என்னவென்று நாட்டுக்குத் தெரிந்துவிடும். ஏற்கனவே ஜே.வி.பி. சில இடங்களில் முதலாமிடத்திலும், சில இடங்களில் இரண்டாமிடத்திலும் இருக்கின்றது என கூறுகின்றன.

இந்தநிலையில் காலிமுகத்திடலை அவர்கள் முற்றாக நிரப்பினால் அவர்களின் பலம் வெளியே தெரிந்துவிடும் என்று அஞ்சித்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி முடிவை எடுத்தார் என்று சொல்லப்படுகின்றது.

இதனால் ஜே.வி.பியினர் மே தினக் கூட்டத்தை கொழும்பு நகர மண்டப வளாகத்தில் நடத்தினர். - என்றுள்ளது.

(அ)

# அதிபர் சேவை தரம் III இற்கான நேர்முகப்பரீட்சை 22 இல் ஆரம்பம்!

கொழும்பு, மே. 09

இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு தகுதியானவர்களை நியமனம் செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கிறது.

கல்வி அமைச்சு, அதிபர் சேவை தரம் III இற்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியலை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சைக்கான பெயர் பட்டியலில் சிங்கள மொழி மூலமான பரீட்சாத்திகள் 3784 பேரும் தமிழ் மொழிமூலமான பரீட்சாத்திகள் 2532 பேரும் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது,

இதன்படி மொத்தமாக 6316 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமாக பெயர் பட்டியல் தனித்தனியாக தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சை இம்மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் ஜூன் முதலாம் வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நியமனமானது ஜூன் இறுதிப் பகுதி அல்லது ஜூலை ஆரம்பத்தில் வழங்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# அமைச்சுப் பொறுப்பை விட்டுக்கொடுக்க தயார்!

## கூறுகிறார் விதுர விக்ரமநாயக்க

கொழும்பு, மே 09

தற்போது நான் வகிக்கும் அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகி நாட்டுக்கு ஆதரவாக வருவோருக்கு வாய்ப்பு வழங்கத் தயாராக உள்ளேன் என பௌத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் ஏற்கனவே தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளோம். அமைச்சரவையில் பல கட்சிகள் உள்ளன. மற்றவர்களும் பங்கேற்க வேண்டும். நாங்கள் எங்கள் அமைச்சுப் பதவிகளை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

மற்றவர்கள் வந்தால் எனது அமைச்சுப் பதவியை நான் கைவிடத் தயாராக இருக்கின்றேன். பெரிய அளவிலான அமைச்சரவைகள் நாட்டுக்கு உதவவில்லை.

எனவே, தற்போது நான் வகிக்கும் அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகிவிட்டு நாட்டுக்கு ஆதரவாக வருவோருக்கு வாய்ப்பு வழங்கத் தயாராக உள்ளேன்-என்றார். (அ)

# குடும்பமாக கொள்ளையடிப்பதற்கு உருவாக்கப்பட்ட கட்சியே மொட்டு!

## சாடுகின்றார் சந்திம வீரக்கொடி



கொழும்பு, மே 09

**"மொட்டுக் கட்சி என்பது ஒரு கட்சியல்ல. அது குடும்பம். குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப் பட்ட கட்சி. இனி அதை யாராலும் கட்டியெழுப்ப முடியாது."**

**-இவ்வாறு கூறியுள்ளார் மொட்டுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி.**

அவர் மேலும் கூறுகையில்-

மொட்டுக் கட்சிக்கு இனி யார் தலைவராக வந்தாலும் அந்தக் கட்சியை இனிக் கட்டி எழுப்ப முடியாது. அது கட்சியல்ல ஒரு குடும்பம். ராஜபக்ஷவின் குடும்பம்.

அந்தக் குடும்பத்தின் இருப்புக்காக அடுத்த அரசியல்வாதிகளை அழித்து - பொருளாதாரத்தை நாசமாக்கி - மக்களின் எதிர்பார்ப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்து குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி இது.

யாருக்குத் தலைவர் பதவி கொடுத்தாலும் ,யாருக்கு அமைச்சுப் பதவிகள் கொடுத்தாலும் இந்தக் கட்சியை இனிக் கட்டியெழுப்ப முடியாது என்பதை ஜனாதிபதி உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் கிருமி தொற்று!

கொழும்பு, மே 09

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் கிருமித் தொற்று காணப்படுவதாக நுவரெலியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளரும் மருத்துவருமான மகேந்திர செனவிரத்ன தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பத்து பேருக்கு கண் பார்வை குறைபாடு ஏற்பட்டுள்ளதாகவும் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதிக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்ட அனைத்து நோயாளர்களும் பார்வையை இழந்துள்ளதாகவும் மருந்தில் விசத்தன்மை உள்ளதாகவும் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கூறினார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் கிருமிகள் இருப்பதாக முதற் கட்ட பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

சிகிச்சை முடிந்து வீடுகளுக்குச் சென்ற நோயாளிகள் பார்வையை முற்றாக இழந்துவிட்டதாகக் கூறி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிகிச்சைக்குப் பின்னர் சில நோயாளிகள் படிப்படியாக குணமடைந்து வருவதாகவும் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர்களை பாதுகாக்க பிரதேச மட்டக் குழு நியமனம்

யாழ்ப்பாணம், மே 09

போதை மற்றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாக்க பிரதேச மட்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் போதை மற்றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர் யுவதிகளை பாதுகாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்புடன், சர்வோதயம் அமைப்பின் அனுசரணையுடன் பிரதேச செயலகத்துடன் இணைத்து குறித்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் சங்கீதா கோகுலதர்சன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் தலைவரும், லண்டன் வோள் தம்ஸ்ரோம் கற்பகவிநாயகர் ஆலய அறங்காவலருமான கோபாலகிருஷ்ணன், கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, போதை மற்றும் சமூக சீர்கேட்டிலிருந்து இளைஞர், யுவதிகளை பாதுகாக்க பிரதேச மட்டக் குழு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பில் பிரபல கோடீஸ்வரர் வீட்டில் பல கோடி ரூபா கொள்ளை!

கொழும்பு, மே 09

கொழும்பு - மீகொட லயனல் ஜயசிங்க மாவத்தையின் மூன்று மாடி ஆடம்பர வீட்டில் இருந்து சுமார் 35 கோடி பெறுமதியான நீலக்கல் மற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கப்பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடுகளுடன் நேரடியாக வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலதிபரின் வீட்டிலேயே இவ்வாறு பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த ஐந்தாம் திகதி வர்த்தகர் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் கொட்டாவ பிரதேசத்தில் உள்ள ஆலயமொன்றில் அன்னதானத்தில் ஈடுபட்டு பின்னர் கொழும்பு பிரதேசத்தில் உள்ள நெருங்கிய உறவினர் வீட்டில் சில மணித்தியாலங்களைச் செலவிட்டு வீடு திரும்பியதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் நித்திரைக்குச் சென்ற தொழிலதிபரை மறுநாள் காலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தொலைபேசியில் அழைத்து அவருக்குச் சொந்தமான சில பைகள் வீதியில் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வீட்டிலிருந்து பல கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் வீட்டின் அலுமாரிகளை உடைக்காமல், வீட்டின் இரண்டாவது மாடியின் பின்பகுதியில் உள்ள ஜன்னலை உடைத்து இந்த திருட்டைச் செய்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். (அ)

# மன்னாரில் சிறுவரை குறிவைத்து சந்தேகத்துக்கிடமான குழு நடமாட்டம்!

## நடவடிக்கைக்கு அரச அதிபர் பணிப்பு

மன்னார், மே 019

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சந்தேகத்துக்கு இடமான வாகனங்களில் வரும் சிலநபர்கள் சிறுவர்களை கடத்தும் நோக்கில் சுற்றித்திரிகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதோடு, இது குறித்து பொலிஸாரின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

கடந்த, சனிக்கிழமை வாகனம் ஒன்றில் வந்த நபர்கள் காலை 6 மணியளவில் மன்னார் ஸ்ரேடியம் பகுதியில் சிறுவன் ஒருவனுக்கு சிற்றுண்டிகளை வழங்கி வாகனத்துக்குள் ஏற்ற முற்பட்டனர். ஆனால், சிறுவன் தப்பியோடியுள்ளான். எனினும் குறித்த கும்பல் சிறுவனை துரத்திச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் தனியார் வகுப்பு உட்பட ஏனைய வேலைகளுக்கு சிறுவர்களை தனியாக அனுப்பும் பெற்றோர்கள் அவதானமாக இருப்பதுடன் சந்தேகத்துக்கு இடமான நபர்களோ வாகனங்களோ உங்கள் பகுதிகளில் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# வடக்கில் விகாரைகள் சட்டவிரோதமெனில், தெற்கில் உள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவையே!

## இப்படிச் சொல்கிறார் சரத் வீரசேகர எம்.பி.



கொழும்பு, மே 09

"வடக்கில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் சட்டவிரோதம் என்றால் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவையே."

- இவ்வாறு பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். அவர்கள் தங்கள் குல தெய்வங்களை வழிபட அந்தந்த இடங்களில் சிறிய மற்றும் பெரிய ஆலயங்களை அமைத்திருக்கின்றார்கள். அதேபோல் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் சிங்கள-பௌத்தர்கள் வாழ்வதற்கு முழு உரித்தும் உண்டு.

வடக்கு-கிழக்கில் சிங்கள-பௌத்தர்கள் வாழ முடியாது என்று எந்தவொரு சட்டமும் இல்லை. வடக்கில் சிங்கள-பௌத்தர்கள் வாழ்கின்றார்கள். இராணுவத்தினர் இருக்கின்றார்கள். அவர்கள் வழிபட விகாரைகள் அமைப்பதில் தவறில்லை-என்றார். (அ)

# பாகிஸ்தான் உளவுத்துறை விரித்த “மோக வலையில்” இந்திய பாதுகாப்பு அதிகாரி சிக்கினாரா?

இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான ரகசிய தகவல்களை பாகிஸ்தான் உளவுத் துறைக்கு சமூக ஊடகங்கள் மூலம் பகிர்ந்ததாக, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டிஆர்டிஓ) விஞ்ஞானியை, பயங்கரவாத தடுப்புப் பிரிவின் புனே பொலிசார் கைது செய்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் பொறியியல் பிரிவு இயக்குநராகப் பணியாற்றி வந்தவர் பிரதீப் மோரேஸ்வர் குருல்கர். 59 வயதான இவர் மீதுதான் அரசு ரகசியங்கள் சட்டப்பிரிவின் கீழ் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம் கொடுத்த புகாரின் பேரில் புனேவின் கலாசௌக் காவல் நிலையத்தில் மே 3ஆம் திகதி குருல்கர் மீது வழக்குப் பதிந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் பயங்கரவாத தடுப்புப் படை அதிகாரிகள் அவரை புனேவில் உள்ள சிவாஜிநகர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.






### குருல்கர் மீதான வழக்கு என்ன?

பயங்கரவாத தடுப்புப் படையின் உயரதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ள தகவல்களின்படி, “இந்தியாவின் ‘எதிரி” நாட்டைச் சேர்ந்த சிலருடன் பிரதீப் குருல்கர் அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்ததாக டிஆர்டிஓ நிர்வாகத்திற்கு அண்மையில் ரகசிய தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலையடுத்து, குருல்கரின் லேப்டாப், கணினி மற்றும் மொபைல்ஃபோனை கைப்பற்றிய டிஆர்டிஓ நிர்வாகம், அவற்றை தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பியது.

அதன் பின்னர் இந்த விவகாரம், டிஆர்டிஓ-வின் கீழ் உள்ள நிலைக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. இந்தக் குழு மேற்கொண்ட விசாரணையின் இறுதி அறிக்கை பெறப்பட்ட பின், குருல்கரின் லேப்டாப், மொபைல்ஃபோன் உள்ளிட்டவை பயங்கரவாத தடுப்புப் பிரிவு டிஜிபி நிலையிலான உயரதிகாரியின் பார்வைக்கு அனுப்பப்பட்டது.

பிரதீப் குருல்கர் டிஆர்டிஓ இயக்குநராகப் பதவி வகித்தபோது, பாகிஸ்தான் உளவுத்துறையைச் சேர்ந்தவர்களுடன் (PIO) ரகசிய தொடர்பில் இருந்ததாக டிஆர்டிஓ நிலைக்குழுவின் விசாரணை மற்றும் தடயவியல் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

குருல்கர் பாகிஸ்தான் உளவுத்துறையினருடன் ரகசிய தொடர்பில் இருந்தபோது, அவர் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, நாட்டின் பாதுகாப்பு தொடர்பான ரகசியங்கள் மற்றும் இதர முக்கிய விஷயங்களை வாட்ஸ் ஆப் மெசேஜ், வாய்ஸ் கால், வீடியோ கால் என அனைத்து முறைகளிலும் பாகிஸ்தான் உளவுத் துறையினருடன் பகிர்ந்துள்ளதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து டிஆர்டிஓ நிர்வாகம் அளித்த புகாரின் பேரில் குருல்கர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ஹனிட்ராப் செய்யப்பட்டாரா குருல்கர்?

டிஆர்டிஓ இயக்குநராக இருந்தவரான குருல்கர் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து, பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி, கூறுகையில், “குருல்கரை தங்களது மோக வலையில் சிக்க வைத்து அவரிடமிருந்து ரகசியங்களை பாகிஸ்தான் உளவாளிகள் கறந்திருக்கலாம் என்றே இதுவரை நடைபெற்றுள்ள விசாரணைகளை வைத்துப் பார்க்கும்போது தெரிகிறது,” என்றார்

அதாவது, பாகிஸ்தான் உளவாளிகள் முதலில் தங்களது சமூக ஊடக பக்கங்களில் சில அழகான பெண்களின் பெயர்களில் புகைப்படத்துடன் கூடிய புரோஃபைல்களை உருவாக்கியுள்ளனர்.

பின்னர் அவற்றில் இருந்து இந்திய பாதுகாப்புத்






துறையில் பணியாற்றும் அதிகாரிகளின் சமூக ஊடக பக்கங்களுக்கு நட்பு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர்.

அழகான பெண்களின் புகைப்படத்தை பார்த்தவுடன் சபலப்பட்டு அந்த விண்ணப்பத்தை சில அதிகாரிகள் ஏற்றுக்கொண்டால் உடனே அவர்களைத் தொடர்பு கொள்ளும் பாகிஸ்தான் உளவாளிகள், அந்த அதிகாரிகளிடம் பெண்களின் வசிய குரலில் பேசி அவர்களை மயக்குகின்றனர்.

இந்த மயக்க நிலையில் அவர்களின் பேச்சு வாய்ஸ் சாட், வீடியோ கால் என எல்லை மீறிப் போக வாய்ப்புள்ளது. அப்போது தொடர்பில் இருக்கும் பாதுகாப்பு அதிகாரியிடம் இருந்து நாட்டின் பாதுகாப்பு தொடர்பான ரகசியங்களைக் கறந்துவிடும் உத்தியைக் கையாண்டு வருகின்றனர் பாகிஸ்தான் உளவாளிகள். குருல்கர் விவகாரத்திலும் இவ்வாறு நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது.





குருல்கர் வழக்கு தொடர்பான விசாரணையில், நிறைய வாட்ஸ் ஆப் உரையாடல்கள் நிகழ்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. அப்படியானால், அந்த வாட்ஸ் ஆப் குழு எங்கிருந்து, யாரால், எப்போது தொடங்கப்பட்டது என்ற பல்வேறு கேள்விகளுக்கு இன்னும் விடை காண வேண்டியுள்ளது என்கிறார் அந்த அதிகாரி.

வாட்ஸ் ஆப்பில் இருந்துதான் முதலில் தமக்கு தகவல் வந்ததாக விசாரணையின்போது குருல்கர் தெரிவித்துள்ளார். ஆனால், பாகிஸ்தான் உளவாளிகள் உடனான அவரது உரையாடல் முதலில் முகநூல் மூலமாகவும் தொடங்கி இருக்கலாம் என்று நாங்கள் சந்தேகிக்கின்றோம் என்கிறார் பயங்கரவாத தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அந்த அதிகாரி.

அதற்குக் காரணம், பாதுகாப்பு மற்றும் அதைச் சார்ந்த முக்கிய துறைகளில் பணியாற்றும் அதிகாரிகள் முகநூலில் கணக்கு ஆரம்பித்து, அதில் அவர்கள் இடும் பதிவுகளை அடுத்த கனமே, பிரத்யேக செயலி மூலம் திருடும் வித்தையை பாகிஸ்தான் உளவுத் துறையினர் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

சமூக ஊடகங்களில் திருடப்பட்ட இந்திய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் குறித்த தகவல்களை சில அழகான பெண்களுக்கு அனுப்பி, அந்தத் தொடர்பின் மூலம் இந்திய அதிகாரிகளை தங்களின் மோக வலைக்குள் சிக்க வைக்கும் வித்தையையும் பாகிஸ்தான் உளவாளிகள் கையாண்டு வருகின்றனர் என்கிறார் பெயர் வெளியிட விரும்பாத அந்த அதிகாரி.

குருல்கரும் பாகிஸ்தான் உளவுத் துறையினர் விரித்த மோக வலையில் விழுந்தாரா என்பது இந்த வழக்கின் விரிவான விசாரணையில் தெரிய வரும் என்கிறார் அவர்.

### இவரா இப்படி?

ஐஐடி கான்பூரில் படித்த பொறியியல் பட்டதாரியான குருல்கர், டிஆர்டிஓ-வில் பல்வேறு உயர் பொறுப்புகளை வகித்து வந்துள்ளார்.

குறிப்பாக, செயற்கைக்கோள்களைத் தகர்த்தெறியும் ஏவுகணை தயாரிப்பு திட்டமான ‘மிஷன் சக்தி’ இவரது தலைமையில்தான் செயல்படுத்தப்பட்டது.

டிஆர்டிஓ-வின் தேர்ந்த விஞ்ஞானியாக அறியப்படும் குருல்கர், தமது அரிய பணிகளுக்காக 2002இல் **DRDO Agni Award for Excellence** உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வாங்கியுள்ளார்.

இன்னும் சில மாதங்களில் பணி ஓய்வு பெற உள்ளதாக அறியப்படும் சிறந்த விஞ்ஞானியான பிரதீப் குருல்கர், பாகிஸ்தான் உளவாளிகளின் மோக வலையில் சிக்கயுள்ளது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

குருல்கர் கைதுக்குப் பிறகு, அடுத்தகட்ட விசாரணையில் சில முக்கிய கேள்விகளுக்கு விடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குருல்கர் நிதி ஆதாயத்திற்காக அலுவலக ரகசிய தகவல்களைப் பகிர்ந்துள்ளாரா என்பது குறித்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு முழுமையாக விசாரணை மேற்கொள்ளும். அவர் பகிர்ந்துள்ள தகவல்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்குக் கேடு விளைவிப்பதாக இருப்பதால், இந்தத் தகவல்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும்.

இதேபோல், குருல்கர் வெளிநாடுகளுக்குச் சென்று வந்துள்ளது தெரிய வந்துள்ளதால் அவர் அங்கு எதிரி நாட்டு உளவாளிகளைச் சந்தித்து பேசினாரா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்படும்.

(பிபிசி)

# கன்பூசியஸ் நிலையம்: சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு ஊடுருவல் கருவி?



யதீந்திரா

அமெரிக்காவிற்கு சவால் விடுக்கும் ஒரு சக்தியாக சீனா எழுச்சியடைந்து வருகின்றது. இதில் தற்போது எவருக்குமே சந்தேகமில்லை. இன்றைய சீனாவின் எழுச்சியின் முதல் பகுதி டெங்சியோ ஒபியின் காலமென்றால், அதன் அடுத்த கட்டத்தை நகர்த்துபவராக தற்போதை சீனத் தலைவர் சி.ஜின்பிங்கின் இருக்கின்றார். சீன வரலாற்றில் மாவோவிற்கு பின்னர் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவராக சி.ஜின்பிங் நோக்கப்படுகின்றார். சீனாவை ஒரு மேலாதிக்க சக்தியாக எழுச்சியடைச் செய்யும் இலக்கில், ஜின்பிங்கின் நிர்வாகமானது, ஆக்கோரசமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், அமெரிக்க - சீன போட்டியே இன்றைய சர்வதேச அரசியல் விவாதங்களை ஆக்கிரமித்திருக்கின்றது.

ஆனால், அமெரிக்க - சீன முறுகல் நிலை பனிப்போர் நிலையை எட்டவில்லையென்றும் - இல்லை பனிப்போர் நிலையை நோக்கி உலகம் நகரத் தொடங்கிவிட்டதாகவும் - இரு வேறு பார்வைகளில் விவாதிப்போருண்டு. அண்மையில் அமெரிக்க வான் பரப்பின் மீது பறந்த சீன உளவு பலூன்கள் அமெரிக்காவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இது ஒரு வகையான பனிப்போர் அரசியலை நினைவுபடுத்துவதாகவே இருக்கின்றது. தாய்வான் விடயத்தில் அமெரிக்கா காண்பித்துவரும் ஈடுபாட்டை, சீனா தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது. அமெரிக்காவின் சபாநாயகர் நான்சி பலுசி, தாய்வானுக்கு விஜயம் செய்ததை தொடர்ந்து, தாய்வான் விடயத்தில் சீனா கடும்தொனியிலேயே பேசிவருகின்றது. தாய்வான் விடயத்தில் தலையிடுவோர் அதன் விலையை கொடுக்க நேரிடுமென்று சீனா அவ்வப்போது எச்சரித்துவருகின்றது. ஆனால், தாய்வானுடனான அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ உறவுகளை அமெரிக்கா, தொடர்ந்தும் பலப்படுத்தி வருகின்றது.

சீனா அடிப்படையில் ஒரு சர்வாதிகார அரசியல் கட்டமைப்பை கொண்டிருக்கும் நாடாகும். இந்த பின்புலத்தில் நோக்கினால், சீனாவின் அரசியலும், இந்திய, அமெரிக்க மற்றும் மேற்குலகத்தின் அரசியல் அணுகுமுறைகளும் தலைகீழானது. அமெரிக்க - சீன போட்டியென்பது வெறுமனே பொருளாதார மற்றும், அதிகார போட்டியல்ல - மாறாக, இரண்டு அரசியல் முறைமைகளுக்கிடையிலான போட்டியாகும்.

அதாவது, சர்வாதிகார அரசியல் கட்டமைப்பிற்கும் தாராளவாத ஜனநாயக கட்டமைப்பிற்கும் இடையிலான மோதலாகும். கம்யூனிச - சர்வாதிகார கட்டமைப்பின் மூலம் வளர்சியடைந்திருக்கும் சீனா, அதனை உலகெங்கும் பரவல்படுத்தவும், அதனை நியாயப்படுத்துவதற்கான செயற்பாடுகளையும் தீவிரப்படுத்தியிருக்கின்றது. இந்த பின்புலத்தில்தான், சீனாவின் கன்பூசியஸ் நிலையத்தின் செயற்பாடுகள் உற்று நோக்கப்படுகின்றன.

2004இல் ஆரம்பிக்கப்பட்ட சீன, கன்பூசியஸ் நிலையம், தற்போது 160 இற்கு மேற்பட்ட நாடுகளில் அதன் செயற்பாடுகளை விஸ்தரித்திருக்கின்றது. உலகெங்கும் 400இற்கு மேற்பட்ட கன்பூசியஸ் நிலையங்கள் இதுவரையில் நிறுவப்பட்டுள்ளன. ஹன்பானா என்னும் அரசுசாரா, அரசாங்க அமைப்பொன்றே இதன் தலைமைக் காரியாலயமாக இருக்கின்றது. இதன் இயக்குனராக இருப்பவர், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடத்தின் உறுப்பினராவார். இது சீன கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றது. இதில் சீன கம்யூனிஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர். 2013இல், கன்பூசியஸ் நிலையங்களின் ஊடாக, சீனா பற்றிய நல்ல பார்வைகளை வழங்குங்கள் என்று, ஜின்பிங், உத்தரவிட்டார்.

ஏனைய நாடுகளுக்குள் இலகுவாக ஊடுருவவும் நோக்கிலேயே, கன்பூசியஸ் நிலையம் என்னும் பெயர் தெரிவுசெய்யப்பட்டது. 2014இல் சைனா போஸ்ட் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையொன்றின்படி, கன்பூஸியசுக்கு பதிலாக, மாவோ அல்லது, டென்சியோ ஒபிக்கின் பெயர் இந்த நிலையத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால், இந்த விடயத்தில், இந்தளவு முன்னேறியிருக்க முடியாதென்று குறித்த பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது. ஏனெனில் மாவோவின் வழியாக சீனா தொடர்பான உலகப் பார்வை எதிர்மறையாக இருக்கின்றது. இந்த எதிர்மறையான சிந்தனையை போக்குவதற்கான ஒரு கருவியே கன்பூசியஸ் நிலையம். இந்த நிலையத்தின் மூலம், சீனா தொடர்பில் நிலவிவரும் விமர்சனங்கள், குறிப்பாக தியன்மன் சதுக்க கொலைகள், சீனாவின் மனித உரிமைகளுக்கு எதிரான கொள்கைள், சர்வாதிகார




ஆட்சிக் கட்டமைப்பு போன்றவை தொடர்பில், சாதகமான அபிப்பிராயத்தை மேற்குலக மாணவர்களுக்குள் புகுத்துவதற்கான ஒரு கருவியாகவே கன்பூசியஸ் நிலையத்தை சீனா பயன்படுத்திவருவதான குற்றச்சாட்டுக்கள் வலுவடைந்திருக்கின்றன. அதே வேளை சீன உளவுச் செயற்பாடுகளுக்கான ஒரு தளமாகவும் இந்த நிலையங்கள் பயன்படுத்தப்படுவதாக மேற்குலக பாதுகாப்பு நிபுனர்கள் எச்சரிக்கின்றனர்.

2013இல், சிக்காக்கோ பல்கலைக்கழக்கத்தை சேர்ந்த பேராசிரியர், மார்ஷல் சாஹ்லின்ஸ், கன்பூசியஸ் நிலையம் சிக்காக்கோ பல்கலைக்கழக்கத்தில் எவ்வாறு நடந்துகொள்கின்றது, நிலையத்தின் தீர்மானங்களின் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பீடம் எவ்வாறு தலையீடு செய்கின்றது போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவான கட்டுரையையொன்றை வெளியிட்டிருந்தார். 2019இல் அமெரிக்க செனட், கன்பூசியஸ் நிலையங்களுக்கான அனுமதியை மறுபரீசீலனை செய்ய வேண்டுமென்று அறிக்கையிட்டிருந்தது. கன்பூசியஸ் நிலையம் சீனாவின் பிரச்சாரத்திற்கான ஒரு தளமாக பயன்படுத்தப்படுவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் 2020இல் அறிவித்தது. தற்போது,

**மேற்குலக நாடுகளின் அல்லது இந்திய பல்கலைக்கழங்களோடு கல்விசார் தொடர்புகளை பேணுவதற்கும், சீனாவின் பல்கலைக்கழங்களோடு இணைந்து பணியாற்றுவதற்குமுள்ள சிக்கல்கள் மாறுபட்டது.**

பிரித்தானியாவில், இந்த விடயம் ஒரு அரசியல் விவாதமாக மாறியிருக்கின்றது.

பிரித்தானியாவில், 30 பல்கலைக்கழகங்களில் கன்பூசியஸ் நிலையங்கள் இயங்கிவருகின்றன. கன்பூசியஸ் நிலையங்களின் செயற்பாடுகள் பிரித்தானிய சட்ட நடைமுறைகளுக்கு மாறாக முன்னெடுக்கப்படுவதாக தற்போது, கண்டறியப்பட்டுள்ளது. பிரித்தானிய பல்கலைக்கழங்களில் பின்பற்றப்படும் கருத்துச் சுதந்திர நடைமுறைகளுக்கு மாறாக கன்பூசியஸ் நிலையங்களின் நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்திருக்கின்றன. இதன் மூலம், பிரித்தானியாவின் சிவில் சுதந்திரம் கேள்விக்குள்ளாகியுள்ளதாக கண்டறியப்பட்டதை தொடர்ந்து, பிரித்தானிய பிரதமர் அனைத்து கன்பூசியஸ் நிலையங்களையும் மூடுவதற்கான உத்தரவை பிறப்பித்திருக்கின்றார். சீனாவை பொறுத்தவரையில் அமெரிக்க மற்றும் மேற்குலகம் பனிப்போர் மனநிலையில் செயற்படுவதாக குற்றம்சாட்டிவருகின்றது. ஆனால் கன்பூசியஸ் நிலையங்களின் செயற்பாடுகளை, தொடர்சியாக, கண்காணித்ததன் மூலம், சில விடயங்களை பிரித்தானிய அதிகாரிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

அதாவது, கன்பூசியஸ் நிலையங்களுக்கான பணியாளர்கள் - தேர்வு செய்யும் முறைமையானது, பிரித்தானிய சட்டங்களுக்கு முரணாணது. அதாவது, பணியாளர்களை தெரிவு செய்யும் போது, அவர்களது அரசியல், பால்நிலைத் தெரிவு, மதம், இனவாத பிரச்சினைகளால் பாதிக்



கப்பட்டவர்களா என்பதை நோக்குதல், அவர்களது அரசியல் நடத்தைகள் அத்துடன் பணிக்காலத்தில் குழந்தை பெற்றுக்கொள்வதில்லை என்னும் உறுதிமொழி போன்ற விடயங்களின் அடிப்படையிலேயே பணியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறான நடைமுறை, பிரித்தானிய சட்டத்திற்கு முற்றிலும் முரணானது.

சீனாவின் மென்வலு அதிகாரத்தை விரிவாக்குவதற்கான ஒரு கருவியாகவே கன்பூசியஸ் நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா, கடனா, பிரித்தானியா மற்றும் ஏனைய மேற்குலக நாடுகளின் பல்கலைகழக நிர்வாகம் தற்போது விழிப்படைந்துவிட்டது. சீனாவின் செல்வாக்கை விரிவாக்குவதற்கான கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கருவியாகவே, கன்பூசியஸ் நிலையங்கள் பயன்படுத்தப்பட்டுவருவது, கண்டுகொள்ளப்பட்டதை தொடர்ந்து, மேற்குலக நாடுகள் கன்பூசியஸ் நிலையங்களுக்கான அனுமதியை இரத்துச் செய்திருக்கின்றன. கன்பூசியஸ் நிலையங்கள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடுருவல் திட்டமென்னும் சர்ச்சைகள் எழுந்ததை தொடர்ந்து, இவற்றை ஆராய்வதற்கான சிறப்பு குழுவொன்றை இந்தியா நியமித்திருந்தது. இந்தியாவில் இரண்டு கன்பூசியஸ் நிலையங்கள் மட்டுமே இயங்கியிருக்கின்றது.

தெற்காசியாவில் அதன் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை தேடிக்கொண்டிருக்கும் சீனா, தற்போது, இலங்கை பல்கலைக்கழங்களிலும் கன்பூசியஸ் நிலையங்களை ஆரம்பிப்பதில் அதிக ஆர்வத்தை காண்பித்துவருகின்றது. தென்னிலங்கையில் மூன்று நிலையங்களை இதுவரையில் நிறுவியிருக்கின்றது. இதன் ஒரு பகுதியாக வடக்கு கிழக்கு பல்கலைக்கழங்களிலும் கன்பூசியஸ் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளில் தீவிரம் காண்பித்துவருகின்றது. இது தொடர்பில் இரண்டு பல்கலைக்கழகங்களையும் அணுகியிருக்கின்றது. இந்த விடயத்தை நமது பல்கலைக்கழங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன?

இந்த விடயத்தை சரியாக புரிந்துகொள்ளாமல் நமது பல்கலைக்கழங்கள் காலை விடுமாக இருந்தால், மேற்குலக பல்கலைக்கழங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் போன்று, ஒரு வேளை அதனைவிடவும் சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிடலாம். வளர்ச்சியடைந்த நாடுகளின் பலக்லைக்கழகங்களே கன்பூசியஸ் நிலையத்தை கையாள முடியாமல் தடுமாறுகின்ற போது, வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழங்களால் எவ்வாறு இதனை எதிர்கொள்ள முடியும்?

ஒரு விடயத்தை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளின் அல்லது இந்திய பல்கலைக்கழங்களோடு கல்விசார் தொடர்புகளை பேணுவதற்கும், சீனாவின் பல்கலைக்கழங்களோடு இணைந்து பணியாற்றுவதற்குமுள்ள சிக்கல்கள் மாறுபட்டது. மேற்குலக, இந்திய பல்கலைக்கழகங்கள் சுயாதீனமானவை. ஜனநாயக கட்டமைப்புக்களின் கீழ் இயங்குபவை. எனவே அவ்வாறான பல்கலைக்கழங்களோடு இணைந்து பணியாற்றுவதில் அரசியல்ரீதியான சிக்கல்கள் இடம்பெறப்போவதில்லை. ஆனால் சீனாவின் பல்கலைக்கழங்களின் தீர்மானங்கள் சுயாதீனமானவை அல்ல. மாறாக, அனைத்துத் தீர்மானங்களுமே, கம்யூனிஸ் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால் சீனாவின் அனைத்து நிறுவனங்களுமே, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார கட்டமைப்பிற்கான பிரச்சார நிறுவனங்கள்தான். இதனை புரிந்துகொண்டே, அகலக் காலை வைப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# புதிய ஆளுநர்களை ஜனாதிபதி விரைவில் நியமனம் செய்வார்!

## நவீன் திஸநாயக்கா

கொழும்பு, மே 09

மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமனம் விரைவில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறேன். இதன்போது ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த மற்றும் ஜனாதிபதிக்கு நம்பிக்கையானவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

அரசியலமைப்பின் 154ஆ உறுப்புரையின் கீழ் மாகாண ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அதன் பிரகாரம் புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். தற்போதுள்ள ஆளுநர்களில் சிலரை பதவி விலகுமாறு தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் உண்மை தன்மை தொடர்பில் எதுவும் தெரியாது. இதேநேரம் குறித்த ஆளுநர்கள் அந்த அறிவிப்பை நிராகரிக்கவும் இல்லை. அதனால் விரைவில் ஆளுநர்களில் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மேலும், ஆளுநர் பதவிக்கு எனது பெயரும் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக முகப்புத்தகத்தில் நான் கண்டேன். ஜனாதிபதி அவருக்கு விருப்பமான, திறமையான, நம்பிக்கையான அதேநேரம் கட்சிக்கு பெரும் சேவையாற்றிய சிரேஷ்ட உறுப்பினர்களை அதற்காக பெயரிடும் என நம்புகிறோம். யார் நியமிக்கப்படுவார்கள் என இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அதேநேரம் ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள், அவர்கள் அரசியல் செய்யும் மாகாணத்துக்கு நியமிக்கப்படமாட்டார்கள். ஏனெனில், ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள் அந்த மாகாணத்தில் அரசியல் செய்யக்கூடாது என்ற சம்பிரதாயம் ஒன்றுக்கு இருக்கிறது. அதனால் ஜனாதிபதி அந்த சம்பிரதாயத்தை பின்பற்றி செயற்படுவார் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

# சிறுவர்களின் அடிப்படை மீறல் மனுக்கள் விசாரணைக்கு ஏற்பு!

கொழும்பு, மே 09

14 வயதுக்குட்பட்ட நான்கு சிறுவர்கள் தாக்கல் செய்த 4 அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான பொய்யான வாக்குமூலத்தில் கையொப்பமிட குற்றப் புலனாய்வு பிரிவினர் வற்புறுத்தியதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் மனுதாரர்களான சிறுவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சாரக் கட்டணங்களை 20 வீதம் குறைக்கவேண்டும்

## ஜானக ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 09

மின்சார கட்டணங்கள் குறைந்தது 20 சதவீதத்தால் குறைக்கப்பட வேண்டும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வருட மின்சார தேவையை மிகைப்படுத்தி கடந்த பெப்ரவரி மாதம் 66 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தை மின்சாரசபை உயர்த்தியதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அப்போது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி 35 சதவீதத்தால் மட்டுமே மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தால், மக்கள் இவ்வளவு அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்க மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பல்கலை. ஆசிரியர் சங்கத்துக்கு பரீட்சைகள் ஆணையர் பாராட்டு

கொழும்பு, மே 09

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளை ஆரம்பிக்க இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் எடுத்துள்ள தீர்மானத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பாராட்டியுள்ளார்.

ஏற்கனவே 12 பாடங்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நேற்று அவர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

அத்துடன், மற்ற பாடங்களின் மதிப்பீட்டுப் பணிகளிலும் உடனடியாக பங்கேற்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியத்திடமும் அனைத்து ஆசிரியர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே 09

பிரித்தானிய பயணத்தை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பியுள்ளார்.

மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்காக ஜனாதிபதி பிரித்தானியா சென்றிருந்தார்.

லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நேற்று முன்தினம் பிரித்தானிய மன்னராக மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு முடிசூடப்பட்டமை தெரிந்ததே.(ஐ)







# சுவாமி விபுலானந்த அடிகள் 99 ஆவது துறவற தினவிழா!



அக்கரைப்பற்று, மே. 09

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிக ளாரின் 99ஆவது துறவற தின விழா கடந்த கடந்த வெள்ளிக்கிழமை காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

முன்னதாக நந்திக் கொடியேற்றம், சுவாமி பிறந்த இல்லத்தில் பூசை வழிபாடு, சுவாமியின் திருவுரு வச்சிலைக்கு காவி வஸ்திரம் அணிவித்தல் புஸ் பாஞ்சலி, துறவற கீதம், ஈசன் உவக்கும் இன் மலர் மூன்று வேத பாராயணம் என்பன இடம்பெற்றன.

இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதி யாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகரா ஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அத்துடன் பணிமன்ற தலைவர் வெ.ஜெயநா தன் கணக்காய்வாளர் வி.குலேந்திரன் உள்ளிட்ட பணிமன்ற நிர்வாகிகள் மற்றும் நடன மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

அதேவேளை, காரைதீவு விபுலாநந்தர் சதுக்கத் தில் உள்ள சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சி லைக்கு மாலை அணிவித்தலும் புஸ்பாஞ்சலியும் இடம்பெற்றது.

மற்றும் சிறி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள சுவாமியின் திருவுருவச்சிலைக்கு வேதபாராயணம், தீபாராதனைகள் இடம்பெற்ற மையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# காத்தான்குடி பிரதேச செயலக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

மட்டக்களப்பு, மே. 09

காத்தான்குடி பிரதேச செய லகத்தின் வேலைத் திட்டங்க ளின் முன்னேற்ற மீளாய்வுக் கூட் டம், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கி ழமை நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செய லாளர் உதய சிறீதர் தலைமை யில் நடைபெற்ற இந்தக் கூட் டத்தில், நிர்வாக கிராம உத்தி யோகத்தர் எம்.எம.ஜரூப், சமுர்த்தி தலைமையக முகாமை யாளர் திருமதி பத்மா ஜெயராஜ், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோ கத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது உணவுப் பாது காப்புத் தொடர்பான ஆய்வு நடவடிக்கை முன்னேற்றம் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டது.

உணவுப் பாதுகாப்புத் தொடர் பான விண்ணப்பங்களை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் விரைவாக இந்த விண்ணப்பங் களை பூர்த்தி செய்யுமாறு, பிர தேச செயலாளர் உதய சிறீதர் அறி வுறுத்தல்களை வழங்கினார். (அ)

# பௌத்த மேலாதிக்கம் தலை விரித்தாடுகிறது

## திருமலை பள்ளி வாசல்கள் சம்மேளனம் குற்றச்சாட்டு

திருமலை, மே. 09

**பயங்கரவாத யுத்தத்தினாலும் பொருளாதார அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் மீது பௌத்த மேலாதிக்கமும் தலை விரித்தாடுகின்றது என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட பள்ளி வாசல்கள் சம்மேளனச் செயலாளருமான எம்.எம்.மஹ்தி குற்றஞ்சாட்டினார்.**



திருகோணமலை ஊடக மையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

வட, கிழக்கு வாழ் தமிழ் மற் றும் முஸ்லிம் மக்களின் காணி கள் பல்வேறு வடிவங்களில் கப லிகரம் செய்யப்படுகின்ற விட யத்தை நாங்கள் நேரடியாக கண்டு கொண்டிருக்கிறோம்.

தொல்பொருள் பாதுகாப்பு, புனித பிரதேச பிரகடனம், இரா ணுவ முகாம், குடியேற்றம் மற்றும் பௌத்த கோவில்கள் அமைப்பு என பல்வேறு வடிவங் களில் சிறுபான்மை மக்களின் காணிகள் கையாகப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

பல்லின மக்கள் வாழுகின்ற இந்த நாட்டிலே, அனைத்து மக் களும் சமத்துவத்தோடு வாழ்வ தற்கான ஏற்பாடுகள் செய்யப் பட வேண்டிய இத் தருணத்தில், சிறுபான்மை மக்கள் மீதும் அவர் களுடைய காணிகள் மீதும் தொடர்ந்தும் இவ்வாறான கையாகப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இது இந்நாடு பொருளாதா ரத்தால் மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாகும். சர்வதேச நாடுகளி டமிருந்து தனிமைப்படுத்தப்படு கின்ற அபாயத்தை ஏற்படுத்தலாம்.

எனவே, இவ்வாறான ஆக்கி ரமிப்பு நடவடிக்கைகளில் இருந்து சிறுபான்மைச் சமூகத் தையும் அவர்களுடைய உரிமை களையும் காணிகளையும் கைய கப்படுத்துகின்ற முயற்சிகளை தடுத்து நிறுத்த ஜனாதிபதி மற் றும் பிரதமர் நடவடிக்கை எடுக் கவேண்டும்-என்றார். (அ)



# சிவானந்தா அணி வெற்றி!

அக்கரைப்பற்று, மே. 09

காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகமும் அஸ்கோ அமைப்பும் இணைந்து நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற் றுப் போட்டி காரைதீவு விபுலா நந்த மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 4.30 கழகத் தலைவர் யா.டிலக்சிகன் தலை மையில் இடம்பெற்றது.

காரைதீவு கூடைப்பந்தாட்ட அணியினை எதிர்த்து மட்டக்க ளப்பு சிவானந்தா அணி மோதி யது. இதில் காரைதீவு கூடைப் பந்தாட்ட கழகம் 45 புள்ளிக ளையும், மட்டக்களப்பு சிவா னந்தா அணியினர் 52 புள்ளி களை பெற்று மட்டக்களப்பு சிவானந்தா அணியினர் வெற் றியை தனதாக்கிக்கொண்டது.

இதில் கலந்துகொண்ட அனைத்து வீரர்களுக்கும் பதக் கங்கள் அணிவிக்கப்பட்டது டன் அணிகளுக்கு கேடயமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு முதன்மை அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், காரைதீவு பிரேத சபையின் செய லாளர் ஏ. சுந்தரகுமார் ஆகி யோர் கலந்து கொண்டனர். (அ)

# சத்திர சிகிச்சை நிபுணர் சம்மாந்துறைக்கு நியமனம்

அக்கரைப்பற்று, மே. 09

சம்மாந்துறை ஆதார வைத்தி யசாலைக்கு பொது சத்திர சிகிச்சை நிபுணராக டாக்டர் நடேசன் அகிலன் நியமிக்கப்பட் டுள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த டாக் டர் அகிலன் கடந்த 27ஆம் திகதி சம்மாந்துறை ஆதார வைத்திய சாலை பணிப்பாளர் டாக்டர் ஆஷாத் முன்னிலையில் கட மையை ஏற்றுக்கொண்டார்.

காரைதீவு .1 விபுலானந்த வீதியில் வதியும் வைத்திய அதி காரி டாக்டர் நடேசன் அகிலன் மற்றும் வைத்திய அதிகாரி டாக் டர் நடேசன் பகீரதன் ஆகிய உடன்பிறந்த சகோதரர்கள் இரு வர், ஒரே வேளையில் இம் மருத் துவ முதுமாணிப் பட்டம் பெற்று



சாதனை படைத்திருந்தனர்.

வரலாற்றில் முதல் தடவை யாக சகோதரர் இருவர் முதல் தடவையாக சத்திர சிகிச்சை நிபுணர்களாக தெரிவாகியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறப்புற நடந்த மடத்தடி மீனாட்சி அம்மனின் கன்னி தீர்த்தோற்சவம்!

அக்கரைப்பற்று, மே. 09

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மாட்டுப் பளை மீனாட்சியம்மன் ஆலய முதலாவது வருடாந்த தீர்த் தோற்சவம் சித்ரா பௌர்ணமி தினத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களோடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 26 ஆம் திகதி ஆரம் பமாகிய முதலாவது வருடாந்த அலங்கார உற்சவம் சித்ரா பௌர் ணமியன்று காலை ஆலய பிர தம குரு சிவசிறி சண்முக மகேஸ் வர குருக்கள் குரு சிவசிறி கோவர்த்தன சர்மா வழிகாட்ட லில் திருப்பொற்சுன்னம் இடிக் கும் நிகழ்வுடன் தீர்த்தோற்சவ கிரியைகள் ஆரம்பமாகின.

அலங்கரிக்கப்பட்ட வாகனத்



தில் அம்பாள் மற்றும் பக்தர்கள் சமுத்திரத்தை நோக்கிச் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் ஊர்வலமாக நடையில் சென்ற னர்.

கடற்கரையில் அம்பாளுக்கு விஷேட அபிஷேகம் செய்து பக்தர்கள் தீர்த்தமாடினர். மீண் டும் ஆலயத்திற்கு வந்து திருவூஞ் சல் பாடி அன்னதானத்துடன் நிறைவடைந்தது. (அ)

# ரஷ்யாவுக்கு வழங்கும் ஆதரவை மீளப்பெறும் வாக்னர் ஆயுத குழு?



மொஸ்கோ, மே. 09

தமக்கு உரிய துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களை வழங்கும் படி வக்னர் ஆயுதக் குழுவின் தலைவரது வேண்டுகோள் உதாசீனப்படுத்தப்பட்ட நிலையில், தாம் ரஷ்ய படைக்கு வழங்கிவரும் ஆதரவை மீளப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

தம்மால் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு அமைய யுத்த முனையில் இருந்து தாம் வெளியேறவுள்ளதாக வாக்னர் ஆயுதக் குழுவின் தலைவர் எச்சரித்திருந்தார்.

முன்னதாக யுத்த முனையில் ஏராளமான தமது படையினரது சடலங்களுக்கு மத்தியில் அவர் நடந்து செல்லும் காணொளி காட்சிகள் இணையத் தளங்களில் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், நேற்று அவரது வேண்டுகோளுக்கு அமைய ரஷ்யா உரிய இராணுவத் தளபாடங்களை வழங்க முன்வந்துள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பக்மட் பிரதேசத்தை கைப்பற்ற ரஷ்ய துருப்பினர் வக்னர் ஆயுத குழுவுடன் இணைந்து பல மாதங்களாக மேற்கொண்டு வந்த தாக்குதல் வெற்றியளிக்கவில்லை.

இதனை கைப்பற்றும் முயற்சியில் வாக்னர் ஆயுதக் குழு முன்னணியில் செயல்படுவதனால் அவர்களின் உறுப்பினர்களே அதிக அளவில் பலியாகியுள்ளனர்.

தற்போது ரஷ்யாவின் உறுதிமொழியை அடுத்து, வாக்னர் ஆயுதக் குழுவினர் தொடர்ந்தும் யுத்தமுனையில் இருந்து செயல்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அச்சுறுத்தியது போல யுத்த முன்னரங்க நிலையில் இருந்து வாக்னர் ஆயுத குழுவினர் பின்வாங்கும் பட்சத்தில், ஒரு வருடத்திற்கும் அதிகமான காலப்பகுதியில் உக்ரைனுக்கு எதிரான யுத்தத்தில் ரஷ்யா பாரிய பின்னடைவைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும் என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(அ)



# கேரளாவில் படகு விபத்து; குறைந்தது 22 பேர் மரணம்!

புதுடில்லி, மே. 09

இந்தியாவின் கேரள மாநிலத்தில் இடம்பெற்ற படகு விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர்.

மலப்புரம் மாவட்டம் துவல்திரம் கடற்பகுதியில் 40 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளுடன் குறித்த படகு நேற்று முன்தினம் இரவு பயணித்த நிலையில், தனூர் பகுதியில் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து கடற்படையினரால் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, சிறுவர்கள் உள்ளிட்ட 21 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சிலர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், காணாமல் போனவர்களை தேடும் பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, சுற்றுலா படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானமைக்கான காரணம் குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கேரளாவில் சுற்றுலா படகுப் பயணம் மாலை 5 மணி வரையே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் விபத்துக்குள்ளான படகு இரவு 7 மணி வரை கடலில் பயணம் செய்துள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 22 உக்ரைனிய ட்ரோன்கள் கருங்கடலில் அழிக்கப்பட்டன

மொஸ்கோ, மே. 09

கருங்கடல் பகுதியில் 22 உக்ரைனிய ஆளில்லா விமானங்களை ரஷ்ய ராணுவம் அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் இகோர் கொனாஷென்கோவ் தெரிவித்தார்.

“நேற்று முன் தினம் இரவு கருங்கடலில் 22 உக்ரைனிய தாக்குதல் ஆளில்லா வான்வழி விமானங்களை வான் பாதுகாப்பு கண்டறிந்துள்ளது. அனைத்து ட்ரோன்களும் மின்னணு போர் மூலம் அடக்கப்பட்டு ஏவுகணை அமைப்புகளால் அழிக்கப்பட்டன,” என்று அவர் கூறினார்.

(அ)

# 12 வருடங்களின் பின் அரபு லீக்கில் சிரியா!



கெய்ரோ, மே. 09

சிரியாவை 12 வருட இடைநீக்கத்திற்குப் பிறகு அரபு லீக்கில் இணைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கெய்ரோவில் அரபு லீக் பிரதிநிதிகள் இதற்காக வாக்களித்தனர்.

எகிப்திய தலைநகரில் பிராந்திய உயர் தூதர்கள் கூடி, சிரியாவை அரபு லீக்கில் மீள இணைவதற்கான வரைபடத்தைப் பற்றி விவாதித்தனர்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 2254 க்கு இணங்க, அரபு அரசாங்கங்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, மோதலுக்கு அரசியல் தீர்வை படிப்படியாக அடைவதற்கான அர்ப்பணிப்பையும் உள்ளடக்கியதாக இந்த மீள் இணைவு திட்டமிடப்பட்டுள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷார் அசாத்தின் அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சி குழுக்களை தொடர்ந்து ஆதரிப்பதுடன், சிரியாவுடன் இயல்புநிலைக்கு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வரும் கட்டார் இந்த சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

அரபு லீக்கில் சிரியாவின் உறுப்புரிமை 12 ஆண்டுகளுக்கு முன்பு இடைநிறுத்தப்பட்டது. அப்போது முதல் சிரியாவில் நடக்கும் உள்நாட்டு போரில் அரை மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். 23 மில்லியன் மக்கள் தொகையை கொண்டிருந்த சிரியாவிலிருந்து, கிட்டத்தட்ட பாதியளவானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

(அ)

# வறுமை நிலையை மறைக்கிறது சீனா!

## அமெரிக்கா குற்றச்சாட்டு

நியுயோர்க், மே. 09

**உலகளவில் பொருளாதாரத்தில் சக்தி வாய்ந்த நாடாக சீனா உருவாகி வரும் நிலையில் அந்த நாட்டில் நிலவும் வறுமையை மறைக்கும் செயல்களில் ஜி ஜின்பிங்கின் அரசு செயல்படுவதாக அமெரிக்க ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.**

அந்த வகையில் சமீபத்தில், 100 யுவானை ஒய்வூதியமாகப் பெறும் ஒருவர் பொருட்கள் வாங்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் காணொளி சீன சமூக வலைதளங்களில் வைரலானதாகவும் அதனைச் சீன அரசு நீக்கியதாகவும் அமெரிக்க பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளன.

மேலும் சீனாவில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள் அங்குள்ள மக்களை அதிருப்தியில் தள்ளி இருப்பதாகவும் ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

சீனாவை சேர்ந்த ஒருவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில், “என் முகத்தை தினமும் நீரால் சுத்தம் செய்கிறேன். ஆனால் என் முகத்தைவிட என் பணப்பை சுத்தமாக இருக்கிறது” என்ற பாடலை பாடி பதிவேற்றியுள்ளார்.

இந்த நபரின் பக்கத்தையும் சீன அரசு தடை செய்துள்ளதாக குறித்த பத்திரிகை தெரிவித்துள்ளது. (அ)

# பிரித்தானிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை வென்ற தொழிற்கட்சி!

லண்டன், மே. 09

பிரித்தானியாவில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி அதிக ஆசனங்களை வென்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியாவின் ஆளும் பழைமைவாத கட்சி, இந்த தேர்தலில் பாரிய தோல்வி அடைந்துள்ள துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியா உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தநிலையில், பிரித்தானிய பிரதமராக ரிஷி சுனக் கடந்த வருடம் பதவியேற்ற பின்னர் அவரின் கட்சி எதிர்கொண்ட முக்கிய தேர்தல் இதுவாக கருதப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான ஆளும் பழைமைவாதக் கட்சி 40க்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.




இது ரிஷி சுனக் தலைமையிலான கட்சியின் பாரிய பின்னடைவாக கருதப்படுகிறது.

இதேவேளை, பிரித்தானியாவின் வட அயர்லாந்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

(அ)

ஈழநாடு



# தேசிய மெய்வல்லுநர் போட்டி; ஹாட்லி மாணவன் சாதனை!



கொழும்பு, மே 09

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் சு. மிதுன்ராஜ் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

63ஆவது தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி தியகம விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.

இதில், இரண்டாம் நாளான நேற்று திங்கட்கிழமை, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி வீரர் சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

23 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் 43.61 மீற்றர் தூரத்திற்கு தட்டை எறிந்து புதிய போட்டி நிகழ்ச்சி சாதனையை மிதுன்ராஜ் நிலைநாட்டினார்.

இலங்கை இராணுவம் சார்பாக பங்குபற்றி 2010இல் சரித் கப்பு கொட்டுவ நிலைநாட்டியிருந்த 42.64 மீற்றர் என்ற போட்டி சாதனையையே மிதுன்ராஜ் புதுப்பித்துள்ளார். மிதுன்ராஜின் சக கல்லூரி வீரர் பிரேம்குமார் மிதுஷன் (35.32 மீற்றர்) வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தார். (ஐ)



## லக்னோ அணியை வீழ்த்தியது குஜராத்

அகமதாபாத், மே 09

ஷுப்மன் கில், ரித்திமன் சஹா ஆகியோரின் அதிரடி ஆட்டமும் மோஹித் சர்மாவின் அபார பந்துவீச்சும் கைகொடுக்க லக்னோ அணியை 56 ஓட்டங்களால் வெற்றி கொண்டது குஜராத் அணி.

ஐ. பி. எல். தொடரில் குஜராத், லக்னோ அணிகளின் போட்டி நேற்றுமுன்தினம் அகமதாபாத்தில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 227 ஓட்டங்களைக் குவித்தது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய விக்கெட் காப்பாளர் ரித்திமன் சஹாவும் ஷுப்மன் கில்லும் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். முதல் விக்கெட்டுக்காக இந்த இணை 142 ஓட்டங்கள் குவித்தது. சஹா 43 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 81 ஓட்டங்கள் எடுத்து ஆவேஷ் கான் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து ஷுப்மன் கில்லுடன் இணைந்த ஹார்திக் பாண்ட்யா 15 பந்துகளில் 25 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். 3ஆவது விக்கெட்டுக்கு கில்லுடன் இணைந்த டேவிட் மில்லர் அதிரடியாக விளையாடினார். இருவரும் அபாரமாக ஆடி ஓட்டங்களை குவித்தனர். இறுதியில் ஷுப்மன் கில் 51 பந்துகளில் 94 ஓட்டங்களும் (2 பௌண்ட்ரி, 7 சிக்ஸர்கள்), டேவிட் மில்லர் 12 பந்துகளில் 21 ஓட்டங்களும் (2 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸர்) குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பின்னர் விளையாடிய லக்னோ அணியின் கைல் மேயர்ஸும் குயின்ரன் டி கொக்கும் ஆரம்பம் முதலே அபாரமாக விளையாடினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 88ஆக இருந்த போது கைல் மேயர்ஸ் ஆட்டமிழந்தார். அவர் 32 பந்துகளில் 48 ஓட்டங்களைச் சேர்த்தார். பின்னர் வந்த தீபக் ஹூடா 11, மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 4 ஓட்டங்களில் வீழ்ந்தனர். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய டி கொக் 41 பந்துகளில் 70 ஓட்டங்களைக் குவித்தார்.

அதன்பின்னர் வந்த வீரர்களில் ஆயுஷ் பதோனி மட்டும் 21 ஓட்டங்கள் சேர்த்தார். ஸ்வப்னில் சிங் 2, குர்ணல் பாண்ட்யா 0, ரவி பிஷ்னோய் 4 ஓட்டங்கள் எடுத்தனர். அந்த அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 171 ரன்கள் மட்டுமே சேர்த்தது.

இதையடுத்து 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி கண்டது.

குஜராத் அணி சார்பில் மோஹித் சர்மா 4, ரஷித் கான், மொகமது ஷமி, நூர் அகமது ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

# இறுதிப் பந்தில் திருப்பம் ஹைதராபாத் த்ரில் வெற்றி!

ஜெய்ப்பூர், மே 09

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 52ஆவது லீக் போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி.

இரண்டாவது இன்னிங்ஸின் கடைசி பந்தை முறையற்ற பந்தாக வீசியிருந்தார் ராஜஸ்தான் வீரர் சந்தீப் சர்மா. அந்தப் பந்தை அடித்தாட முயன்று பிடி கொடுத்திருந்தார் சமாத். அது முறையற்ற பந்து என்பதால் தப்பித்த அவர், ப்றீ-கிற் வாய்ப்பில் சிக்ஸர் விளாசி தன் அணியை வெற்றி பெற செய்தார்.

215 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஹைதராபாத் அணி விரட்டியது. முதல் விக்கெட்டுக்கு 51 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர் அன்மோல் பிரீத் சிங்கும், அபிஷேக் சர்மாவும். பின்னர் ராகுல் திரிபாதி உடன் 65 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் அபிஷேக். 34 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்து அபிஷேக் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கிளேசன் (26 ஓட்டங்கள்), திரிபாதி (47 ஓட்டங்கள்), அணித்தலைவர் மார்க்ராம் (6 ஓட்டங்கள்), பிலிப்ஸ் ஆகியோர் ஆட்டமிழந்தனர். பிலிப்ஸ், 7 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். அப்துல் சமாத், 7 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்தப் போட்டியில் கடைசி 2 ஓவர்களில் 41 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 19ஆவது ஓவரில் பிலிப்ஸ் மூன்று சிக்ஸர் மற்றும் ஒரு பௌண்ட்ரி விளாசி ஆட்டமிழந்தார்.



கடைசி ஓவரில் ஹைதராபாத் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரை சந்தீப் சர்மா வீசி இருந்தார். முதல் 5 பந்துகளில் 12 ஓட்டங்களை அவர் கொடுத்திருந்தார்.

கடைசி பந்தில் ஹைதராபாத் அணியின் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட, அந்தப் பந்தை முறையற்றதாக வீசி கையில் இருந்த வெற்றியை ஹைதராபாத் வசம் கொடுத்தது ராஜஸ்தான் அணி.

முன்னதாக ஆடிய ராஜஸ்தான் றோயல்ஸ், 214 ஓட்டங்கள் குவித்தது. பட்லர் மற்றும் சஞ்சு சாம்சன் என இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தனர்.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணிக்கு, யாஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஜோஸ் பட்லர் இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர்.

முதல் விக்கெட்டுக்காக 54 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர் இருவரும். இளம் வீரர் ஜெய்ஸ்வால் 18 பந்துகளில் 35 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்த அணித்தலைவர் சஞ்சு சாம்சன், பட்லருடன் பலமான கூட்டணி அமைத்தார். இருவரும் 138 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். பட்லர், 59 பந்துகளில் 95 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். 10 பௌண்ட்ரி மற்றும் 4 சிக்ஸர்கள் அவரது இன்னிங்ஸில் அடங்கும்.

இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த சஞ்சு சாம்சன், 38 பந்துகளில் 66 ஓட்டங்கள் எடுத்து அசத்தியிருந்தார். (ஐ)

# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் சபலென்கா சம்பியன்

மட்ரிட், மே 09

மட்ரிட் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றார்.

ஸ்பெயின் நாட்டின் மட்ரிட் நகரில், மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடர் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் சபலென்காவும், கிரீஸ் நாட்டின் மரியா சக்காரியும் மோதினர்.

இதில், சபலென்கா 6-4, 6-1 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்றுக்கு இறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

வெள்ளிக்கிழமை நடை பெற்ற மற்றோர் அரையிறுதிப் போட் டியில்



போலந்து வீராங்கனை இகா ஸ்வியாரெக்கும், ரஷ்ய வீராங்கனை வெரோனிகா குன்டர்மெடோவாவும் மோதினர். இதில் ஸ்வியாரெக் 6-1, 6-1 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இந்நிலையில் சனிக்கிழமை நடந்த இறுதிச் சுற்றில் சபலென்காவும், இகா ஸ்வியாரெக்கும் மோதினர். முதல் செற்றை 6-3 என்ற கணக்கில் சபலென்கா கைப்பற்றினார். ஆனால், 2ஆவது செற்றில் சுதாகரித்து விளையாடிய ஸ்வியாரெக் 6-3 என்ற கணக்கில் அந்த செற்றை கைப்பற்றினார்.

இதைத் தொடர்ந்து வெற்றியைத் தீர்மானிக்கும் கடைசி செற்றில் சிறப்பாக விளையாடிய சபலென்கா 6-3 என்ற கணக்கில் வென்றார். (ஐ)

# பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு எந்தத் திட்டங்களும் அரசிடம் இல்லை!

## எரான் விக்ரமரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, மே 08

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான எந்தத் திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு அது சார்ந்த செயற்திட்டங்களில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது மறைப்பெறுமானத்திலேயே காணப்படுகின்றது.

தொழில்வாய்ப்புகள் இல்லாமல் போகின்றன.

தற்போதைய நிலையில் இலட்சக்கணக்கான தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போயுள்ளன.

இன்னும் ஐந்து இலட்சம் வேலைவாய்ப்புகள் இல்லாமல் போவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

வேலைவாய்ப்புகள் இல்லாமல் போகின்றதன் என்பதன் அர்த்தம் என்னவெனில் வருமான மார்க்கம் இல்லாமல் போவதே ஆகும்.

வருமானத்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு ஊதிய அதிகரிப்பு என்பதும் இல்லை.

பொருட்களின் விலைகள் அதிகரித்து செல்கின்றன.

மிகவும் அசௌகரியமான சூழலே காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்றுக்கொள்வதனூடாக ஒரு ஸ்திரத்தன்மையை நாட்டில் ஏற்படுத்தும் முயற்சிகளே மேற்கொள்ளப்படுகின்றன.

நாம் எவ்வாறு பொருளாதாரத்தை முன்னேற்றப்போகின்றோம் என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக நாம் செயற்படுகின்றோம்.

எதிர்க்கட்சி என்ற முறையில் எமக்கு பொறுப்புகள் இருக்கின்றன.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அவதானிக்கவேண்டும். அரசாங்கம் தவறான பாதையில் பயணிக்கின்றதா சரியான பாதையில் பயணிக்கின்றதா என்பது குறித்து அவதானிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் திட்டங்கள் மக்களுக்கு நன்மையளிக்கும் திட்டங்களா என்பது குறித்தும் அவதானிக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் வேண்டியது அவசியம்.

முதலீடுகள் அவசியம், புதிய தொழிற்துறைகள் அவசியம்.

ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கவேண்டும். எனினும் இந்த அரசாங்கத்திடம் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான எந்தத் திட்டங்களும் இல்லை-என்றார். (அ)

# சீரற்ற காலநிலையால் சிறுவர்களுக்கு பாதிப்பு

கொழும்பு, மே 9

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக வயிற்றுப்போக்கு போன்ற நோய்களால் சிறுவர்கள் பாதிக்கப்படுவது அதிகரித்திருப்பதாக சிறுவர் நல மருத்துவர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

மழை காரணமாக ஈக்களின் பெருக்கம் அதிகரித்திருப்பதே இதற்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

சிறுவர்களை இவ்வாறான நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கு சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது மிகவும் அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சீரற்ற காலநிலை காரணமாக தொற்றுநோய் பரவலும் அதிகரித்து வருவதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார். (அ)

# மகிந்தவை பிரதமராக்குவதற்கு ஜனாதிபதி ரணில் இணக்கம்!

## சஜித் அணி எம்.பி. பரபரப்பு தகவல்

கொழும்பு, மே. 09

ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசு தயாராகி வருவதாகவும், மொட்டு கட்சியின் ஆதரவுடன் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால், ராஜபக்ஷவை பிரதமராக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே மொட்டு கட்சி அவருக்கு ஆதரவளிக்கின்றது."

- எனவும் அவர் கூறினார். (அ)

# அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு?

கொழும்பு, மே. 09

இறுதி காலாண்டில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு எதிர்பார்த்த இலக்குகளை எட்டினால், அதன் நன்மைகள் பொதுமக்களுக்கு கிடைக்கும் என கூறினார்.

"நாம் தற்போது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அதன் மூலம் இந்நாட்டு மக்களுக்கு நன்மை கிடைத்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் மறுசீரமைக்கப்பட்ட பின்னர் அரசாங்க ஊழியர்களுக்கு இறுதி காலாண்டில் சம்பள உயர்வை வழங்க எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். அதனால்தான் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசாங்கம் எதிர்ப்பார்க்கும் இலக்கை எட்ட முடியுமானால் அரச ஊழியர்களுக்கும் அதன் நன்மைகள் கிடைக்கும்" என்று பாலித ரங்கே பண்டார கூறினார்.



# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு முழு ஆதரவு

## மொட்டு கட்சி எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, மே. 09

**"ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்தவுடன் எரிபொருட்களுக்கான வரிசை இல்லை. மின் வெட்டு இல்லை. உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக இறங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்குவேன்."**

இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் தகுதியான ஒரு வேட்பாளரை நிறுத்தி அதில் நிச்சயம் வெற்றி பெறுவோம். அந்த வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் இருக்க முடியும். அவர் வேட்பாளராக வந்தால் அவருக்கு நான் முழு ஆதரவு வழங்குவேன்.

வீழ்ந்து கிடந்த பொருளாதாரத்தை அவர் இப்போது மெல்ல மெல்லத் தூக்கி நிமிர்த்தி வருகின்றார். அவர் மிகவும் திறமைசாலி என்பதை நிரூபித்துள்ளார்.

அவர் ஜனாதிபதியாக வந்தவுடன் எரிபொருட்களுக்கான வரிசை இல்லை. மின் வெட்டு இல்லை. உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு இல்லை. டொலர் பிரச்னை தீர்ந்து கொண்டு வருகின்றது.

டொலரின் பெறுமதி குறைந்து நாணயத்தின் பெறுமதி அதிகரித்துக்கொண்டு வருகின்றது. எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார். அப்படியான ஒரு திறமைசாலி தொடர்ச்சியாக நாட்டை ஆட்சி செய்தால் நாடு நிச்சயம் முன்னேறும். அவர் வேட்பாளராகக் களமிறங்கினால் நான் அவரை ஆதரிப்பேன்-என்றார். (அ)

# கம்பஹாவுக்கு விரைந்தது விசேட டெங்கு ஆய்வுக்குழு

கொழும்பு, மே. 09

கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோய் தொற்று அதிகமாக பரவி வருவதால் டெங்கு நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த விசேட குழுவொன்றை நேற்று அனுப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் இதுவரை 7 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, நேற்று முன்தினம் வரையில், நாட்டில் 31,098 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த நிலையில், மேல் மாகாணத்தில் அதிகளவானோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், கடந்த ஆண்டு மே மாதம் வரையில் இலங்கையில் 24 ஆயிரத்து 206 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தில், டெங்கு நோய் தொற்றின் 3 ஆம் திரிபே இதற்கு பிரதான காரணம் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்திய ரூபாவில் வர்த்தகத்தை தொடரும் பேச்சுக்கள் ஆரம்பம்

கொழும்பு, மே. 09

இந்தியாவும் இலங்கையும் 'மின்சக்தி, எரிசக்தித் துறை மற்றும் ரூபாய் வர்த்தகம் தொடர்பான அம்சங்களில்' இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த உள்ளமையால், இந்திய ரூபாவில் வர்த்தகத்தைத் தொடர்வதற்கான பேச்சுகளை ஆரம்பித்துள்ளன.

இதன்படி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நிர்வாகத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரியான பிரமோத் குமார் மிஸ்ரா, இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொடவை புதுடில்லியில் சந்தித்து, கடன் மறுசீரமைப்பு உட்பட பல விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதை இலங்கை தூதுவர் வலியுறுத்தினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பின் ஊடாக இலங்கையில் இந்திய முதலீடுகள், மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் பல வங்கிகள் வொஸ்ட்ரோ கணக்குகள் எனப்படும் சிறப்பு ரூபாய் வர்த்தக கணக்குகளை திறந்துள்ளன. இதன்படி, இலங்கைப் பிரஜைகள் தற்போது 10 ஆயிரம் இந்திய ரூபாய்களை வைத்திருக்க முடியும்.

அத்துடன் இந்திய தரப்பினர்களுடனான பரிவர்த்தனைகளுக்கு அமெரிக்க டொலர்களுக்குப் பதிலாக இந்திய ரூபாயைப் பயன்படுத்தலாம் என்ற விடயம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படவேண்டும் என இந்திய அதிகாரி பிரமோத் குமார் மிஸ்ரா மற்றும் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட ஆகியோர் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (அ)

## வடக்கு...

மக்களினதும் - தமிழ் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை சர்வதேச ரீதியாகவும் நாட்டுக்குள் ளேயும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. இந்த அடிப்படைக்கு மாறாக எந்தப் பேச்சிலும் ஈடுபட நாம் தயாராக இல்லை - என்று குறிப்பிட்டுள்ள அவர், இவற்றின் அடிப்படையிலேயே இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ள சந்திப்பிலும் பங்கு பற்றுவோம் என்றும் கூறியுள்ளார். (ஐ-02)

## தமிழரசு...

சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்குமாறு தமிழரசு கட்சிக்கு ஜனாதிபதி செயலகம் நேரடியாக அழைப்பு விடுத்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழரசு கட்சி விலகி தனித்து இயங்கிவரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பங்கேற்க தமிழரசு கட்சிக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால் இந்த சந்திப்பில் பங்கேற்பதில்லை என்று தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கி வரும் புளொட், ரெலோ கட்சிகள் முடிவு எடுத்துள்ளன.

கடந்த காலங்களில் ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான மூன்று கட்சிகளின் தலைவர்களுக்கும் தனித் தனியாகவே அழைப்பு விடுக்கப்பட்டன. இம்முறை கட்சிகளுக்கு அவ்வாறு தனியாக அழைப்பு விடுக்காமையே இன்றைய சந்திப்பை அந்தக் கட்சிகள் புறக்கணிக்கக் காரணமாகும்.

இதனிடையே, இன்றைய தினம் நடைபெறவுள்ள சந்திப்பில் வலியுறுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் தமிழரசு கட்சி இரா. சம்பந்தன் தலைமையில் நேற்று அவரின் இல்லத்தில் கூடி ஆராய்ந்தது. இந்த சந்திப்புக்கும் புளொட், ரெலோ கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் அந்தக் கட்சிகள் பங்கேற்கவில்லை.

சம்பந்தனின் இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், த. கலையரசன், இரா. சாணக்கியன் ஆகியோருடன் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவும் பங்கேற்றார். இந்த சந்திப்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி. பங்கேற்கவில்லை. எனினும், அவர் இன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசும் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவில் இடம்பெறுவார் என்றும் தெரிய வந்தது. (ஐ)

## ஜனாதிபதியுட...

விடுத்திருந்தார்.

இந்தப் பேச்சில் பங்கேற்பதாக தமிழரசு கட்சியும், தமிழ் மக்கள் கூட்டணியும் தெரிவித்தன.

இந்த நிலையில், கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களை அழைக்காத நிலையில் இந்த சந்திப்பில் பங்கேற்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது. இது தொடர்பில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழுந்திருந்தன.

இந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர் ஒருவர், ஜனாதிபதியுடனான பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கும் என்று எமக்கு உறுதிப்படத் தெரிவித்தார். (ஐ)

## தமிழ் கட்சிகள்...

இயந்திரத்தால் முன்னெடுக்கப் படுகின்ற நிலையில் அரசாங்கத்தின் பேச்சு அழைப்பை நாம் மிக கவனமாகக் கையாள வேண்டும்.

ஒவ்வொரு முறையும் பேச்சுக்கு அழைத்து பசப்பு வார்த்தைகளை கூறுகின்றார்களே அன்றி உருப்படியான நடைமுறை ரீதியிலான நீண்டகால தீர்வுகள் எதனையும் வழங்குவதாகவோ செயலில் உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதாகவோ இல்லை. மாறாக படிப்படியாக எமது தனித்துவம், நிலங்கள் என்பன திட்டமிட்டு பொதுமைப்படுத்தப்பட்டு வருவதுடன் இவ்வாறான பேச்சுகள் மூலம் அன்று வரையான மாற்றங்கள் அங்கீகரிக்கப்பட்டனவாக மாற்றம் பெறுவதுடன் புதிய பிரச்னைகளை தோற்றுவிப்பதன் மூலம் அவை மறக்கடிப்படுகின்றன அல்லது மழுங்கடிக்கப்படுகின்றன.

இந்த ஜனாதிபதி பதவி ஏற்று ஒரு வருடம் ஆகின்ற நிலையில் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வுப் பொதி வெளியிடுகின்றேன், சில ஆக்கபூர்வமான விடயங்களை நடைமுறைப்படுத்துகின்றேன் என்றார். நடந்ததோ வேறு.

தமிழர் தாயகத்தில் மேலாதிக்க ஆக்கிரமிப்பு மனநிலையுடன் மிக மோசமாக பௌத்தமயமாக்கல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு தொல்லியல் திணைக்கள அடாவடி செயல்பாடுகள் மற்றும் பௌத்தமயமாக்கல் முற்றாக நிறுத்தப்படல், தமிழர்களின் ஆதி தமிழர் வழிபாட்டிடங்களுக்கு எந்தவித இடையூறுமின்றி வழிபடும் உரிமையை வேற்று மத பிரசன்னங்கள் இன்றி அங்கீகரித்தல், வடக்கு - கிழக்கில் காணி விடுவிப்பு மற்றும் முழுமையான மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை போன்ற சமகால விடயங்களில் உடனடி தீர்வை முன்நிபந்தனையாக இந்த மாதத்துக்குள் நிறைவேற்றக் கோர வேண்டும்

நிரந்தர தீர்வுக்கான பேச்சு கால அட்டவணையின் கீழ் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நடுநிலை அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த காலத்தில் இந்த விடயங்களில் தலையிட்ட நாடுகளை - வாக்குறுதி தந்த நாடுகளை - ஐ. நா. சபையை எமது தீர்வு மற்றும் புதிய ஆக்கிரமிப்புக்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை தடுக்க, அரசு மீது பொருளாதார நெருக்கடியான இத்தருணம் மேலும் அழுத்தம் தரக் கோர வேண்டும்.

தீர்க்கமான காலகட்டத்தில் வலிகள் சுமந்த தியாகங்களால் சிவந்த தமிழர் வாழ்வில் கண்ணீரின் உச்சந் தொட்ட இந்த மாதத்தில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் இல்லாவிடின் ஒத்துழையாமை இயக்கத்தை அரசின் சகல திட்டங்களுக்கு எதிராக முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தையும் கோரி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக் கப்பட்டது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயல்பாட்டை முன்னெடுக்கவுள்தாக பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர். அத்துடன், நாம் முன்னெடுக்கும் இச்செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடு களையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றனர்.

### கஞ்சி விநியோகம்

வல்வெட்டித்துறையில் இன்று காலை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வு ஆரம்பமாகும். தொடர்ந்து, மருதனார்மடம் சந்தி, காரைநகர் இந்துக் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக, சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படும்.

நாளை புதன்கிழமை காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக, புதுக்குடி யிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளத்தில் விநியோகிக்கப்படும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை மன்னாரிலும் வவுனியாவிலும் கஞ்சி விநியோ கிக்கப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை திருகோணமலை சிவன் கோவில், பத்திரகாளி அம்மன் கோவில், அன்பொளிபுரம், மூதூர் பகுதியிலும், மறு நாள் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பங்கேற்புடன் வந்தாறுமூலை வளாகம் முன்பாகவும் செங்கலடி, ஆரை யம்பதி, மட்டக்களப்பு பிள்ளையார் கோவில் பகுதியிலும் அடுத்தநாள், ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் கஞ்சி விநியோகிக்கப் படவுள்ளது.

எதிர்வரும், 15ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தின் சகல பாடசாலை களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படும் என்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (ஐ-03)

## தஞ்சமடைந்த...

போன்ற பல்வேறு சித்திரவதை காரணமாக அங்கிருந்து வெளியேறி இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இவ்வாறு தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்களின் கைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டு உறவினர்களுடன்கூட தொடர்பு கொள்ள முடியாதளவுக்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு திருமணம் கடந்த உறவின் மூலம் கருவுற்றவர்களை உடனடியாக நாட்டுக்கு அனுப்புகின்றனர். ஆனால், ஆரோக்கியமாக உள்ளவர்கள் எவரையும் நாட்டுக்கு அனுப்பாது 9 மாதங்கள் வரை தடுத்து வைத்துள்ளதுடன் பலர் பல நோய்களால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன் சிறையில் அடைக்கப்பட்டவர்கள்போல எங்களை நடத்துகின்றனர்.

இங்கு நடக்கும் அட்டூழியங்கள் எதுவும் வெளியே தெரிவிக்க முடியாத நிலையிலுள்ளதுடன் இங்கிருந்து நாட்டுக்கு செல்கின்ற பெண் ஒருவரின் கைபேசியில் நாங்கள் உரையாடி அவரிடம் இதனை வெளியிடுமாறு தெரிவித்து அனுப்பியுள்ளோம். எனவே, எங்களை இங்கிருந்து காப்பாற்றுங்கள் - என்று கோரியுள்ளனர். (ஐ)

## ஜனாதிபதி சாதக...

என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பணிமனையில் நேற்று திங்கட்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்தோம்.

நிலையான அமைச்சரவை, பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் ஆகியன தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. இதன் பின்னர் அமைச்சு பதவி தொடர்பில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தவில்லை - இனியும் வலியுறுத்த போவதில்லை - என்றார். ஐ)

## வேட்பாளரான...

போட்டியிடும் எல்லைப் பகுதியில் பணியாற்றும் அரச ஊழியர்கள், சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், நிறுவனத் தலைவரின் அறிவுரையின் பேரில் அருகிலுள்ள தேர்தல் எல்லைப் பகுதியில் பணி புரிவதற்கான வாய்ப்புள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

## சஜித்தின்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயல்குழு நேற்று கூடியபோதே இந்தத் தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

அரசாங்கத்தின் அடக்குமுறைகள், ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் இதன்போது நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், அங்கு இரண்டு சிறப்புத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஜனநாயகத்தை மீறும் அடக்குமுறை அரசாங்கத்தில் இணையக்கூடாது, பதவிகளைப் பெறக்கூடாது என்று செயல்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது. அடக்குமுறை அரசாங்கத்துடன் தொழில்சங்கம் பற்றி கலந்துரையாடுவது அல்லது அத்தகைய பிரேரணைகளை கொண்டு வருவது மக்களின் பெயரால் செய்யப்படும் பெரும் தவறு எனவும் அவ்வாறு செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. செயல்குழு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டுக்கு ஆதரவான முற்போக்கு செயல்பாடுகளுக்கு ஆதரவளிப்பதில் கட்சி என்ற ரீதியில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேபோன்று, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற மற்றுமொரு பிரேரணைக்கு செயல்குழு ஏகமனதாக ஒப்புதல் அளித்துள்ளது.

இவ்வாறு நியமிக்கப்படும் வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்த பரந்த கூட்டணியை கட்டியெழுப்பவும் - இதற்கு தேவையான சகல அதிகாரங்களையும் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கவும் செயல்குழு ஆதரவு வழங்கியுள்ளது.

கட்சியின் செயல்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக செயல்படும் எவருக்கும் எதிராக கட்சியின் யாப்பின் பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முதலில்...

நினைவேந்தல்களை கைப்பற்றுவது பற்றி சிந்திக்கலாம் என குறித்த தரப்புகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் போராளிகள் உட்பட பாதிக்கப்பட்ட தரப்புகள் அமைதியாகக் காணப்படும் நிலையில் எங்கோ இருந்த தரப்புகள் தற்போது துள்ளிக்குதித்துக் கொண்டிருக்கின்றன. தியாக தீபம் திலீபன் நினைவேந்தல், அன்னை பூபதியின் நினைவேந்தல் போன்றவற்றில் குழப்பங்கள் இடம் பெற்றிருந்தன.

ரணில், ராஜபக்ஷவின் நரித் தந்திரத்தை புரியாமல் தமிழ்த் தலை வர்கள் தனி வாத்தியம் இசைக்கக் கூடாது. மாறாக ஒருமித்து நினை வேந்தல்களை மேற்கொள்ளும் தருணத் திலேயே எங்களுக்கான நீதி கிடைக் கப்பெறும் - என்றும் கூறினர்.

முன்னதாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அளித்த நேர்காணல் ஒன்றில், தியாகி திலீபன், அன்னை பூபதி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே கைப்பற்ற வேண்டும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-03)

ஈழநாடு
Eelanadu

# சிங்களவரையும் தமிழரையும் தூண்டி இன முறுகலை தோற்றுவிக்க முயற்சி!

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



கொழும்பு, மே 09

**இலங்கையிலுள்ள சிங்களவர்களையும் தமிழர்களையும் தூண்டிவிட்டு மீண்டும் இன ரீதியான பிரச்சினையை தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

வடக்கு-கிழக்கில் தற்போது அதிகரித்து வரும் இன மற்றும் மத முரண்பாடுகளால் நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பௌத்தர்களையும் இந்துக்களையும் முட்டிமோதவிட்டு மத ரீதியிலான பிரச்னையை மென்மேலும் தீவிரப்படுத்த சதி நடைபெறுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் இந்த நாட்டின் நல்லிணக்கத்துக்கு பெரிதும் பாதிப்பே ஏற்படுத்தி வருகின்றன.

இந்த இரண்டு பிரச்னைகளும் ஒரே மேசையில் பேசித் தீர்த்தால் தான் அந்தப் பிரச்னைகளுக்கு முடிவு கட்டலாம்.

இல்லையேல் இந்தப் பிரச்னைகள் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்-என்றார். (அ)

# றெலிக்கொம் நிறுவனத்தின் பங்குகள் ஜூன் 15ஆம் திகதிவரை விற்கப்படாது

கொழும்பு, மே 09

றெலிக்கொம் நிறுவனத்தின் அரசாங்கத்துக்கு சொந்தமான பங்குகள் எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதி வரை விற்பனை செய்யப்படமாட்டாது என நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உயர் நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

றெலிக்கொம் நிறுவனத்தின் பங்குகளை மாற்றுவதற்கு எதிராக 2 தொலைத்தொடர்பு தொழிற்சங்க ஆர்வலர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் உயர்நீதிமன்றுக்கு இந்த விடயத்தை அறியப்படுத்தினார்.

நிதி அமைச்சின் செயலாளர் சார்பில், முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்த பங்குகளை மாற்றுவதற்கான செயல்முறை முற்றிலும் சட்டபூர்வமானது என்றும் மன்றுரைத்தார்.

இந்த நிலையில் இரு தரப்பு விவாதங்களை ஆராய்ந்த நீதியரசர் குழாம், குறித்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிவரை ஒத்திவைத்தனர். (அ)

# கோதுமைமா, சீனி விலை அதிகரிப்பு!

கொழும்பு, மே 09

கோதுமை மா மற்றும் சீனி ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதாக அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கோதுமை மா கிலோவொன்றின் விலை 10 ரூபாவினாலும், சீனி கிலோவொன்றின் விலை 25 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் மேலும் கூறியுள்ளது.

கோதுமை மாவுக்கான இறக்குமதி வரி விலக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் திரும்பப் பெறப்பட்டதையடுத்து, அதன் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் வெள்ளை சீனி மெற்றிக் தொன் ஒன்றின் விலை 500 அமெரிக்க டொலர்களில் இருந்து 750 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாகவும், இதன் காரணமாகவே இலங்கையிலும் சீனி விலை அதிகரித்துள்ளதென்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (அ)

# தொல்பொருள் சிலை கடத்திய மூவர் கைது!

மன்னார், மே 09

தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய வகை விக்கிரகம் ஒன்றுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதான வீதி பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து, பேருந்தில் பயணித்த சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியை சேர்ந்த இரண்டு பெண்களும், ஆண் ஒருவருமே கைதாகியுள்ளனர். (அ)





# யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் கல்லூரி நாள் நிகழ்வுகள் நேற்று

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு கல்லூரி நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை கல்லூரி பீற்றோ மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கல்லூரியை அறிவோம் என்ற தொனிப் பொருளில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.

வண பிதா யோசப் நைற் அவர்களால் 1823 ஆம் ஆண்டில் அங்கிலிக்கன் திருச்சபை சார்ந்து நல்லூரில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளே கல்லூரி நாளாகவும் நிறுவுனர் தினமாகவும் அனுட்டிக்கப்படுகிறது.

நிகழ்வின் முன்னதாக சென் ஜோன்ஸ் சிற்றாலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (அ)

# ஜனாதிபதிக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளாது மொட்டு

கொழும்பு, மே 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக்கொள்வது தொடர்பில் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

மொட்டு கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு கூறினார்.

“பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன்தான் தற்போதைய அரசு செயற்படுகின்றது. எமது கட்சிக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அந்த ஆணையை மீறும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டால்தான் எமது கட்சியால் தீர்மானமொன்று எடுக்கப்படும். எனினும், ஜனாதிபதி அவ்வாறு செயற்படவில்லை. அரசில் இருந்து வெளியேறுவதற்கான தேவையும் எழவில்லை.” - எனவும் சாகர குறிப்பிட்டார். (அ)

# இரத்மலானை குடு அஞ்சுவுக்கு பிரான்ஸில் உயர்தர ஹோட்டல்!

கொழும்பு, மே 09

சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பில் பலம் பொருந்திய பாதாள உலக தலைவர் இரத்மலானை குடு அஞ்சு எவ்வாறு பிரான்ஸில் அகதியாக வசித்து, எவ்வாறு வர்த்தகத்தை முன்னெடுத்தார் என்பது தொடர்பில் பிரான்ஸ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பண மோசடியின் கீழ் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸில் சொகுசு விடுதியொன்றை வாங்கிய குடு அஞ்சு அதனை தனது மனைவி எனக் கூறப்படும் பிரெஞ்சு பெண்ணின் பெயரில் பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இரத்மலானை குடு அஞ்சு விடுதியை வாங்கி குறித்த பிரான்ஸ் யுவதிக்கு கொடுத்து “நமஸ்தே” என்ற பெயரில் அதனை நடத்தி வந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடுதியில் அடிக்கடி விருந்துபசாரங்கள் நடைபெறுவதாகவும், இதில் குடு அஞ்சுவின் பிரான்ஸ் நாட்டு காதலி நடன மங்கையாக பங்கேற்று வந்துள்ளார் என்றும் மேலும் தெரியவந்துள்ளது.

இதுதவிர பிரான்ஸ் நாட்டின் போர்டோக்ஸ் பகுதியில் வேறு ஒருவரின் பெயரில் வைன் தொழிற்சாலையையும் அவர் நடத்தி வந்துள்ளார். (அ)

# ரணில்-மொட்டு கூட்டாட்சியில் திருடர்களை எப்படிப் பிடிப்பது?

## அசோக அபேசிங்க கேள்வி

மொழும்பு, மே 09

ரணில் விக்ரமசிங்கவும் மொட்டுக் கட்சியும் ஒன்று சேர்ந்து இருக்கும்வரை ஒருபோதும் திருடர்களைப் பிடிக்க முடியாது, திருடர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இருக்கும் போது எப்படித் திருடர்களை பிடிப்பது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றஉறுப்பினர் அசோக அபேசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழல் தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து என்ன பிரயோசனம்? இறுதியில் நீதிமன்றத்தையே அவமதித்துவிட்டுச் செல்வார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக் கட்சியும் ஒன்று சேர்ந்து இருக்கும் வரை ஒருபோதும் திருடர்களைப் பிடிக்க முடியாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற் றால் ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்துதான் ஒருவர் பிரத மராகுவார்.

ஆனால், ரணில் வெற்றி பெறப்போவதில்லை. தான் வந்ததும் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிட்டன என ரணில் நினைத்துக்கொண்டு இருக்கின்றார்.

எங்களுக்குத்தான் தெரியும் ரணில் யாரென்று. மக்களைச் சிக்கலில் தள்ளாமல் அவர்களை நல்ல முறையில் வாழ வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# 2 சிறுமிகள் தப்பி ஓட்டம்!

மட்டக்களப்பு, மே 09

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு சீர்திருத்த நிலையம் ஒன்றில் இருந்து 14,13 வயதுடைய இரு சிறுமிகள் நேற்று திங்கட்கிழமை தப்பி ஓடியுள்ளனர்.

மாவட்டத்தில் சிறுவர் திருமணம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்கள் குறித்த பராமரிப்பு நிலையத்துக்கு நீதிமன்றத்தினால் அனுப்பப்படுகின்றனர்.

இந்நிலையில் நீதிமன்றினால் குறித்து சிறுவர் பராமரிப்புக்காக அனுப்பப்பட்ட வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியும் ஏறாவூரைச் சேர்ந்த 13 வயது சிறுமியும் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் என பாராமரிப்பு நிலையத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.